www.eelamview.com


# விடுதலைப்புலிகள்

குரல் 90 ஆனி – ஆடி 1999 அன்பளிப்பு 5/=



உள்ளே

★ விரிவடையும் மரபுப்போர்
★ இலக்குத்தேடும் இராணுவமும் இடையறாத தோல்விகளும்
★ வாழ்வு தந்து போனவர்கள்
★ சமரும் மருத்துவமும்
★ ஒளிநொச்சிப் புதைகுழி
★ உளப்பலத்தால் உழைத்தவன்
★ உலைக்களம்


# மாங்குளம் பாதைதொடர்பாக படைத் தலைமை விதிக்கும் நிபந்தனை!

# தமிழ்மக்களுக்கான போக்குவரத்து ஏற்பாடா!

# படையினரின் இராணுவ நலனுக்கான சூழ்ச்சியா!

**26**.6.99 அன்று படையினர் நடாத்திய ரணகோஷ - 4 படையெடுப்பைத்தொடர்ந்து, பள்ளமடு போக்குவரத்துப்பாதையை இராணுவம் மூடியது.

இதன்பின்னர் புதிய பிரயாணப்பாதைக்காக இராணுவத் தலைமை அறிவித்த மூன்று மார்க்கங்களில் முக்கியமானதான மாங்குளம் ஊடாகச் செல்லும் வவுனியா-யாழ் சாலையை புலிகள் தாமதமின்றி ஏற்றுக்கொண்டு ஐ.சி.ஆர்.சி. ஊடாக அரசுக்கு அறிவித்தனர்.

புலிகளின் பதிலைப் பெற்றுக் கொண்ட இராணுவத்தலைமை முதலில் மௌனம் சாதித்தது. சில நாட்களின் பின்னர் மாங்குளம் பாதைதிறப்பிற்காக நிபந்தனை ஒன்றை விதித்தது. படையினர் நிலைகொண்டுள்ள முன்னரங்கிலிருந்து ஐந்து கி.மீற்றர் நீளமும் ஒரு கி.மீற்றர் அகலமுமான புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியை இராணுவ சூன்யப் பிரதேசமாக புலிகள் ஏற்றுக்கொண்டு - தமது காவல் அரண்களை பின்னுக்கு நகர்த்த வேண்டும் என நிபந்தனையிட்டனர். இந்த நடவடிக்கைக்கு 'தமிழ் பிரயாணிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடு' என்று படையினர் விளக்கமளித்தனர்.

1990 யூனில் இரண்டாம் ஈழப் போர் ஆரம்பமான நாளிலிருந்து பள்ளமடு பாதையை படையினர் மூடியநாள்வரை இராணுவத்தின் முன்னரங்க நிலைகளுக்கும் புலிகளின் முன்னரங்க நிலைகளுக்கும் இடையேயான பகுதியூடாகவே போக்குவரத்து நடைபெற்று வந்தது.

ஆரம்பத்தில் இராணுவ சூனியப்பகுதி என்ற ஒன்று இல்லாமலே போக்குவரத்துப்பாதை இருந்தது. அதன்பின்னர் இருபகுதி நிலைகளுக்கும் இடையே இருந்த பகுதி இராணுவ சூனியப்பகுதியாக இருபகுதியாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு போக்குவரத்து இடம்பெற்றது.



## சூழ்ச்சிகளை வெல்லுமொரு விதிசெய்வோம்!

ஆனால், இத்தனைகால வழமைக்குமாறாக பெரும்பகுதி நிலத்தை-அதுவும் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியை விட்டு புலிகள் பின்வாங்கி அந்த நிலத்தை இராணுவ சூனியப் பிரதேசமாக அறிவிக்க வேண்டும் என்று இராணுவத் தலைமை வலியுறுத்துவதில் ஒரு சூழ்ச்சியே அடங்கியுள்ளது.

ஒன்றரை வருடகாலமாக முயன்றும் மாங்குளத்துடன் தடுத்து நிறுத்தப்பட்டுவிட்ட வவுனியா-யாழ் பிரதானவீதியை கைப்பற்ற படைத்தலைமை செய்யும் இராணுவ சூழ்ச்சியின் முதற்கட்டமான 5 கி. மீற்றர் நீள இராணுவ சூனியப்பகுதி என்ற நிபந்தனையாகும்.

65 கி.மீ.நீள வவுனியா - கிளிநொச்சி வீதியைக்கைப்பற்ற ஜயசிக்குறுய் என்ற பெயரில் சிங்களப் படைகள் முயன்றன. எனினும் ஏறக்குறைய 550நாள் முயற்சியில் ஆக 35 கி. மீற்றர் நீள பாதையை மட்டுமே (மாங்குளம்வரை) படையினரால் கைப்பற்ற முடிந்தது.

இந்த 35 கி. மீற்றர் நீள பாதையைக் கைப்பற்றும் சண்டைகளில் மூவாயிரம் படையினரை சிங்கள அரசு இழந்தது. சுமார் ஏழாயிரம் படையினர் படுகாயமடைந்தனர். சுமார் அறுநூறு கோடி ரூபாய் பெறுமானமுள்ள இராணுவ தளபாடங்களை இழந்திருந்தது.

இந்த இழப்பு விபரத்தை வேறு ஒருவகையில் சொல்வதானால், ஒரு கி. மீற்றர் நீள பாதையைப் பிடிக்க 15நாள் முயற்

( 02ஆம் பக்கம் பார்க்க )

**தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு**

www.eelamview.com

www.eelamview.com



# விரிவடையும் மரபுப்போர்

புலிகளின் குரல்

வன்னியில் நடைபெறும் மரபுப்போரை, சிங்களப் படைகள் விரிவுபடுத்தி வருகின்றன.

இதற்கு அனுசரணையாக இவ்வருட இறுதியில் நடாத்தப்படும் என்று கூறப்பட்ட சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தலை அடுத்த வருட இறுதிப்பகுதிவரை அரசாங்கம் பிற்போட விரும்புவதாக ராஜதந்திரவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

போர்மூலம் தமிழரின் இனப்பிரச்சனையைத் தீர்க்க முடியாது என்ற யதார்த்தத்தை களநிலைமையும் - உலக சமூகமும் அம்மையாரின் அரசாங்கத்திற்கு எடுத்துக்காட்டிய பின்பும், அவர்கள், போர்ப்பாதையைக் கைவிடத் தயாராக இல்லை.

அமைதியை நிலவச்செய்வேன் என்று கூறுரைத்த அம்மையார் கடந்த ஐந்து வருடங்களாக இரத்தம் சிந்தும் போரைத் தலைமையேற்று நடாத்துகின்றார்.

தமிழரின் தேசிய எழுச்சியை ஒடுக்கமுனையும் போரை, சிங்களமக்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டாலும்; போரின் விளைவுகளால் அவர்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாகின்றனர்.

வெகுதொலைவில் போர்நடக்க தமது ஊரும் நகரமும் அபிவிருத்திப்பாதையில் வீறுநடைபோடும் என்றும், தமது வாழ்க்கைத்தரம் உயரும் என்றும் கற்பனை செய்த சிங்கள மக்கள் ஏமாந்துபோயினர். போரும் அதன் கொடூரவிளைவுகளும் அவர்களது அன்றாட வாழ்க்கையிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

இதனால் தமிழர் நிலங்களை போர்மூலம் கைப்பற்றி - அந்தச் செய்தியை தனது அரசாங்கத்தின் ஆட்சியின் வெற்றியாகக் காட்டும் சந்திரிகா அரசாங்கத்தின் அரசியல் பிரச்சாரம் சிங்களமக்களிடம் அவ்வளவாக எடுபடவில்லை.

அண்மையில் நடந்துமுடிந்துள்ள சிறிலங்காவின் ஐந்து மாகாண சபைகளுக்குமான தேர்தல் முடிவுகள் இதை துலாம்பரமாகக் காட்டியுள்ளன.

எனினும், சிங்கள மக்களின் அதிருப்திச் சைகையை சந்திரிகா அம்மையார் கருத்திலெடுக்கவில்லை.

மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளித்தல் என்ற ஜனநாயகக் கடமையை புறந்தள்ளிவிட்டு, பேரினவாத சக்திகளின் இராணுவ அபிலாசைகளை நிறைவேற்றுவது என்ற வெறித்தனமான ஆக்கிரமிப்புக்கொள்கையை அம்மையார் தேர்வு செய்து அமுல்ப்படுத்துகின்றார்.

முடிந்தால் வன்னிப்பெருநிலப்பரப்பை முழுமையாக ஆக்கிரமித்துவிடுவது. முடியாவிட்டால் குடாநாட்டிற்கு ஒரு இராணுவப் பாதையையாவது அமைத்துவிடுவது என்பது சந்திரிகா அரசாங்கத்தின் தற்போதய இராணுவத்திட்டமாக உள்ளது.

ஜயசிக்குறுய் இராணுவப்பாதை சாத்தியமற்றது என்று அனுபவவாயிலாகக் கண்டு உணர்ந்தபின்னர், இப்போது ரணகோச இராணுவப்பாதையை அமைக்க சிங்களப் படைகள் முயற்சிக்கின்றன.

ரணகோச பயணமும் சாத்தியமற்றது என்ற இராணுவச் சூழல் உருவாகும்போது வேறு ஒரு கவர்ச்சிப் பெயரில் வேறு ஒரு இராணுவப்படையெடுப்பை ஆரம்பித்து தனது ஆக்கிரமிப்புக்கொள்கையை விடாது தொடர வேண்டும் என்பதில் சந்திரிகா அரசாங்கம் உறுதியாக உள்ளது.

அரசபடைகளின் இராணுவப்பாதை அமைப்பு முயற்சி குறைத்து மதிப்பிடக்கூடியதல்ல. இந்தப் பாதை அமைப்பில் சிங்களப் படைகளின் ஒட்டுமொத்த இராணுவநலனும் தங்கியுள்ளது. பாதை அமைப்பு முயற்சியில் அரசபடைகள் வெற்றி பெற்றால் அந்த நிலத்தை புறப்படுதளமாகப் (LAUNCH PAD) பயன்படுத்தி வன்னி நிலப்பரப்பினுள் குறுக்கும் நெடுக்குமாக படையெடுப்புகளை நடாத்தி பெருநிலப்பரப்பை இராணுவ ஆதிக்கத்திற்குள் கொண்டுவரும் இராணுவக்கனவுடன் சிங்களப் படைத்தலைமை உள்ளது.

உயர்வடிவில் கடந்த - மூன்று நான்கு ஆண்டுகளாக வன்னியில் நடைபெறும் மரபுவழிப் போர் புலிகளின் போர் ஆற்றலைச் சிதைத்து வருவதாக சிங்களத் தரப்பு கணிப்பிட்டுள்ளது. ஆனால் 'கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட' கதையாக தமிழர் நிலங்களை ஆக்கிரமிக்க, ஆக்கிரமிக்க தமிழர் படையின் எழுச்சி அதிகரித்து வருவதை ஏற்க சிங்களம் விரும்பவில்லை. களத்தில் சிங்களப்படைக்கு முகம் கொடுக்கமுனையும் மக்களின் மனப்போக்கு அண்மையநாட்களிலிருந்து அதிகரித்துவருகின்றது. இது போராட்டத்திற்கு உத்வேகம் கொடுத்தபடி உள்ளது.

சவாலுக்கு முகங்கொடுத்து - போராடி வாழ்வது என்பது இயற்கையின் நியதி. இந்த விதிக்கு இப்பூமியிலுள்ள எதுவுமே விதிவிலக்கல்ல. ஈழத்தமிழினமும் இத்தகையதொரு சவாலுக்கு முகங்கொடுத்தபடி உள்ளது. இந்த இராணுவச்சவாலை முறியடித்து - வரலாற்றுக் கடமைபுரிய எமது மக்கள் ஒட்டுமொத்தமாகத் தயாராகவேண்டும். இந்த மண்ணில் புதியதொரு சரித்திரம் படைக்கவேண்டும். ஈழத் தமிழரின் தாயகம் தமிழரின் தேசமாக மலர வேண்டும். O

( 01ஆம் பக்கத் தொடர்ச்சி )

## மாங்குளம்...

சியுடன், சுமார் 85 படையினரைப் பறிகொடுத்து, ஏறக்குறைய 209 படையினரைப் படுகாயத்திற்குள்ளாக்கி, சுமார் 15 கோடிரூபாயை செலவழித்து, என்ற ரீதியில் ஜயசிக்குறுய் படையினர் விலை கொடுத்திருந்தனர்.

எனினும், ஜயசிக்குறுய் காலகளயதார்த்தம் வேறு, இன்றைய களநிலைவேறு.

ஜயசிக்குறுய் சமரின் பின்பகுதியில் புலிகளின் மரபுப் போர்வலு சிறப்பாக வளர்ச்சிகண்டிருந்தது. இதற்கு உதாரணமாக மாங்குளம் பேரூரைக் கைப்பற்றுவதற்கு படைத்தரப்பு எடுத்துக் கொண்ட காலமும் - இந்தக் காலப்பகுதியில் அது சந்தித்த உயிர் மற்றும் படைக்கல இழப்பும் சுட்டிக்காட்டத்தக்கது.

மாங்குளம் சந்திக்கு முன்பாக ஏறக்குறைய மூன்று கி. மீற்றர் தூரத்தில் நிலைகொண்டபடி சுமார் ஒருவருடகாலம் படையினர் பாரிய முயற்சிகள் பலவற்றை எடுத்து -பெருமளவு இழப்புகளைச் சந்தித்த பின்பே மாங்குளத்தைக் கைப்பற்றினர். அதுவும், கிளிநொச்சி நகரை மீட்க புலிகள் மாபெரும் தாக்குதலைத் தொடுத்திருந்த புறச் சூழலிலேயே மாங்குளத்தைக் கைப்பற்ற படையினருக்கு முடிந்தது.

மாங்குளத்திற்கு அப்பால் பிரதான வீதிவழியே ஒரு அங்குல நிலத்தைத்தானும் கைப்பற்றமுடியாத சூழலிலேயே ஜயசிக்குறுய் நடவடிக்கையை படைத்தலைமை கைவிட்டது. எனினும், வவுனியா - யாழ் சாலை மீது படைத்தலைமைக்கு ஒரு கண் இருந்தது. மாங்குளம் ஊடாக ஒரு போக்குவரத்துப் பாதை திறப்பது என்ற நிலை எழுந்தவுடன் தனது நிறைவேறாத இராணுவ ஆசையை நிறைவேற்ற படைத்தலைமை சூழ்ச்சி செய்கின்றது.

மாங்குளத்திலுள்ள தனது முன்னரங்கத்திலிருந்து 5 கி.மீற்றர் தூரத்தை இராணுவ சூனியப்பகுதியாக மாற்றுவதில் அரச படைகள் வெற்றிபெற்றால் படைத்தரப்பிற்கு ஒரு பாரிய இராணுவ வெற்றியாக அமைந்துவிடும்.

தருணம் வரும் போது சந்தடியின்றி இந்த இராணுவ சூனியப்பகுதியூடாக படையினரை நகர்த்தி மிகச்சுலபமாக யாழ் - வவுனியா சாலையில் 5 கி.மீ நீளத்தை கைப்பற்ற, படைத்தலைமை சதிசெய்கிறது.

உடன்பாட்டை மீறி இராணுவ சூனியப் பகுதிக் கூடாக படைநகர்த்த படைத்தலைமைக்கு அதிக நேரம் பிடிக்காது. அதுபோல, போக்குவரத்திற்காக குழுமிநிற்கும் மக்கள் மீது குண்டு மழை பொழிந்தபடி முன்னேறி நிலம்பிடிக்க சிங்களப் படைகள் அஞ்சாது. முன்னைய போக்குவரத்துமையமான தாண்டிக்குளம் ஊடாக ஒரு படைநகர்வை, சிங்கள இராணுவம் செய்ததை இங்கே நினைவூட்ட விரும்புகின்றோம். அதுபோல, அண்மையில் பள்ளமடுப்பகுதியில் போக்குவரத்திற்காக காத்திருந்த மக்கள்மீது எறிகணைத் தாக்குதல்களை நடாத்திக்கொண்டு முன்னேறிய ரணகோச - 4 படைநடவடிக்கையும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கது.

தனது இராணுவ நலனை அடையும் களமாக மக்களின் போக்குவரத்து மார்க்கத்தைப் பயன்படுத்துவது படைத்தரப்பின் வழமை என்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்தநிலையில், போக்குவரத்துப்பாதைக்காக படைத்தலைமையின் நிபந்தனையை ஏற்று படையினர்க்கு ஒரு பாரிய இராணுவ வெற்றியை வழங்கி போராட்டத்தை நெருக்கடிக்குள்ளாக்குவதா!

அல்லது, அவ்விநம் செய்யாது தவிர்த்துவிட்டு அதற்கு விலையாக ஒரு வாழ்வியல் நெருக்கடிக்கு முகங்கொடுக்க வன்னி மக்களைத் தயார்படுத்துவதா! என்ற இரண்டிலொரு நிலையே தீர்வாக உள்ளது.

பொருட்களின் வருகைக்கான, மக்களின் பிரயாணத்திற்கான போக்குவரத்து ஏற்பாடு என்பது வன்னி வாழ் மக்களின் ஜீவனோபாயத்துடன் பின்னிப்பிணைந்துள்ளது என்பதில் இரண்டு கருத்திற்கு இடமில்லை. இந்த ஜீவனோபாய வலயத்தில் கைவைக்க அரசு சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது.

ஏதோ ஒரு கட்டத்தில், இன்றோ நாளையோ ஏதாவது ஒரு சாட்டைக் கூறிக்கொண்டு வன்னிமீது பூரணபோக்குவரத்துத் தடையை சிறிலங்கா அரசு விதித்தேதீரும். நாளைக்கு அதை எதிர்கொள்வதைவிட இன்றே அதற்கு முகங்கொடுப்பது சிறந்தது. O




www.eelamview.com

# இலக்குத்தேடும் இராணுவமும் இடையறாத தோல்விகளும்

இராணுவம் கண்டி வீதியை ஆக்கிரமிப்பதன் மூலம் தமிழர் மீதான இராணுவ மேலாதிக்கத்தை சிங்கள தேசத்தில் காட்டி, தன் ஆட்சி அதிகாரத்தை மீண்டும் நிலை நிறுத்திவிடத் துடித்த சந்திரிக்கா அரசாங்கத்திற்கு, அது அபத்தமான சிந்தனை என்பதை புலிகள் கற்பித்தனர்.

தன் ஆட்சிக் காலத்தை பூர்த்தி செய்யும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம், அடுத்து வரும் தேர்தலில் தன் ஆட்சியை உறுதிப்படுத்திக் கொள்ள ஒரு இராணுவ வெற்றியே ஆதாரம் என்பதை ஆழமாக உணர்ந்துள்ளது.

காத்திருந்த வெற்றிச் செய்திகள் கைமீறிப் போனபின், தன் வல்லமைக்குட்பட்டதெனக் கருதி, 'மன்னார் - பூநகரி வீதியூடாக யாழ் பாதை திறப்பு' என்பதை தெரிவு செய்து படையை இறக்கிவிட்டிருக்கின்றது அரசு.




தேர்தல் காலம் நெருங்கிவிட்டதால் வெற்றிச் செய்திக்கான தேவைக்காலமும் நெருங்கிவிட்டிருக்கின்றது. வெற்றியை பெற்றுக்கொடுப்பதற்காக, தேவையான படைகளும், படை ஆயுதங்களும், அதிகாரமும் கூட இராணுவத் தரப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும், இராணுவ கட்டளைப்பீடமும், படைகளும் இப்புதிய இலக்கோடு நடவடிக்கையில் இறங்கிவிட்டன. அதன் அடிப்படைத் திட்டம் இதுதான்:

யாழ் குடாவைத் தளமாகக் கொண்டு, புலிகளின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி விட்டகன்ற பூநகரியை மீளப்பிடிப்பது. அதே நேரம் ஆக்கிரமிக்கப்பட்ட மன்னாரை தளமாகக்கொண்டு, பள்ளமடுவைக் கைப்பற்றுவது. இவ்விரு பிரதேசங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டு, இவற்றை இருசமர் முனைகளாகக் கொண்டு முன்னேறிப் பாதையை இணைப்பது என்பதுவே.

இவ்விரு சமர்முனைகளையும் கைப்பற்றுவது இந்நடவடிக்கைக்கு அடிப்படையானது. இதனடிப்படையிலேயே' சுழல்காற்று'', ''ரணகோஷ -4 இரண்டாம் கட்டம்'' என்ற நடவடிக்கைகள் பெரும் எடுப்பில் செய்யப்பட்டன. ஆயினும் அவை இலக்கை அடையாத நடவடிக்கைகளாக தோல்வியடைந்தன.

10. 06. 99 அன்று பூநகரியை கைப்பற்றுவதை இலக்காகக்கொண்டு ''சுழல்காற்று'' நடவடிக்கை படையினரால் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையில் முப்படைகளையும் பயன்படுத்த வேண்டிய தேவை இருந்தது. ஏனெனில் அதன்திட்டம் மும்முனை நகர்வைக் கொண்டிருந்தது.

கல்முனைப் பிரதேசத்தில் உலங்கு வானூர்திமூலம் ஒருதரையிறக்கமும், முனைப் பிரதேசத்தில் வேகப் படகுகள் மூலம் ஒரு தரையிறக்கமும் செய்யப்பட்டு அவை முன்னேறி பூநகரியை பிடித்து தற்காப்பில் ஈடுபடும், அதேவேளை மேலதிக படைகள் சங்குப்பிட்டி - கேரதீவுப் பாதையூடாக அனுப்பிவைக்கப்படும். இந்நடவடிக்கையில் புலிகள் தமது பலத்தைக் குவிக்காதவாறு, திசைதிருப்பும் நடவடிக்கையாக ஆனையிறவு - பரந்தன்தளத்திலிருந்து ஒருபடைத் தொகுதி முன்னேறும் என்பதே அதன்திட்டம்.

இந்நடவடிக்கை மன்னார்- பூநகரி பாதை திறப்பதற்கு அத்திவாரமாக கருதப்படுவது. இதன் வெற்றி, உறுதி செய்யப்பட்டாலே பாதை திறப்பு நடவடிக்கை மேற்கொண்டு சாத்தியமாகும். எனவே இந்நடவடிக்கை பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததும், அரசின் தலைவிதியை தீர்மானிப்பதில் பங்குள்ளதும் ஆகும். இதனால் இம் மும்முனை நகர்வை வழிநடத்த முப்படைத் தளபதிகளும் யாழிற்கு நேரில் வருகை தந்து நடவடிக்கையை நேரில் வழிநடத்தினர்.

10.06.99 அன்று MI - 24 தாக்குதல் உலங்கு வானூர்திகள் பாதுகாப்பு வழங்க, MI-17 துருப்புக் காவி உலங்கு வானூர்திகள் கல்முனையில் தரையிறக்க முயன்றபோது புலியணிகள் தாக்குதலில் ஈடுபட்டன. திடீரென மேலெழுந்த உலங்கு வானூர்திகள் கல்முனையில் பிறிதொரு இடத்தில் மீண்டும் தரையிறக்க முயன்றபோது அங்கு நிலைகொண்டிருந்த புலியணிகள் விரைந்து தாக்கின. தாக்குதலில் சேதமடைந்த MI-17 உடனடியாக களம் திரும்பியது. இராணுவத் தரப்பு இதை எதிர்பார்க்கவில்லை. இவ் எதிர்ப்பால் தரையிறங்கும் முயற்சி தற்கொலைக்கு ஒப்பானது என்ற முடிவோடு விசேட கொமாண்டோக்களுடன் உலங்கு வானூர்திகள் களம் திரும்பின.

இதேவேளை கடல்வழியாக தரையிறங்க வந்த விசேடபடகுப் படைப்பிரிவை தாக்கி நிர்மூலமாக்க புலியணிகளும், அதற்கு உதவியாக பூநகரி தளத்தின் சேம இருப்பு அணிகளும் விரைந்து தயாரான போது, வேகமாக தரையை அண்மித்துக் கொண்டிருந்த தரை இறங்கும் படகுகள் சடுதியாக பின்வாங்கின. விசேட கொமாண்டோக்களின் வான்வழி தரை இறக்கம் முறியடிக்கப்பட்ட நிலையில் S.B.S ஐ தரையிறக்கி எமது

**- கு. கவியழகன் -**

கைகளில் தந்துவிட அவர்கள் துணியவில்லை. இதனால் சங்குப்பிட்டியில் காத்திருந்த காலாட் படையினரும் செயற்படுவதற்கான அவசியம் இல்லாமல் போய்விட்டது.

நடவடிக்கை முறியடிக்கப்பட்ட அதே நேரம், திசை திருப்பும் தாக்குதல் கட்டதீவில் புலிகளிடம் பெரும் இழப்பை சந்தித்தது. எமது முன்னணிப் பாதுகாப்பு நிலைகளை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தை அழித்துவிட முறியடிப்பு தாக்குதலில் புலிகள் இறங்கினர். கடும் சண்டை அங்கே தொடர்ந்தது. இறுதியில் லெப். கேணல் தர அதிகாரி உட்பட பத்தொன்பது இராணுவத்தினர் கொல்லப்பட நூறுபேர்வரையில் காயமடைந்த நிலையில் முகாம் நோக்கி இராணுவம் பின்வாங்கியது. இதில் 07 போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

மொத்தத்தில் ''சுழல்காற்று'' நடவடிக்கை அதன் கரு நிலையிலேயே புலிகளால் முறியடிக்கப்பட அடங்கிப்போனது. சமரை வழி

( 09ஆம் பக்கம் பார்க்க)



படை காவிவந்த படைக்கலன்கள்
பறித்தெடுத்த பூரிப்பில் புலிவீரர்கள்

www.eelamview.com



# வாழ்வு தந்து போனவர்கள்

- அன்பு

ஒரு ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசம். அது எப்படி இருக்கும்? கனத்த இரவுகள்; அவற்றின் நிசப்தத்தைக் கிழிக்கும் ஓரிரண்டு துப்பாக்கிச் சூடுகள்; யார் யாருக்கு அந்தச் சூடுகளோ என அந்தரிக்கும் இதயங்கள். விடிகின்ற போதினில் திடீர் திடீரென சுற்றி வளைக்கப்படும் கிராமங்கள்; அச்சத்துடன் யன்னல் திரைவிலக்க, வேலிகளின் மேலால் தெரியும் சட்டித் தொப்பிகள்; பாயிலிருந்து தட்டியெழுப்பப்பட்டு கோயிலுக்கோ இல்லை பாடசாலைக்கோ ... எங்கோ ஓரிடம் நோக்கிச் சாய்க்கப்படும் மக்கள். விசாரணைகள்; முகமூடிகள்; தலையாட்டிகள்; கைதுகள்; சித்திரவதைகள்; புதைகுழிகள்; இப்படித்தான் - இப்படித்தான் இருக்கும் ஒரு இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசம்.

1996ல் யாழ் குடாநாடு எதிரியால் முற்றாக ஆக்கிரமிக்கப்பட்டது முதல் ஒரு புதிய போரரங்கை அங்கே திறந்தனர் புலிகள். மக்கள் கவசத்தில் மக்களுடன் மக்களாக, கெரில்லா அணிகளாக, இராணுவ இயந்திரத்தை அந்த ஆக்கிரமிப்பு பிரதேசத்தில் செயல் இழக்கச் செய்யப் புறப்பட்டனர் புலிகள். அந்த ஆக்கிரமிப்பு வலயத்தில் காண்கின்ற இடம் எலலாம் காவலரண் என்றான நிலை. புலிகளின் ஊடுருவலைத் தடுக்கவென குடாநாட்டைச்சுற்றி இராணுவ தடுப்பரண்கள். சிலநூறு மீற்றர்களுக்கு ஒரு காவலரண். அந்தப் பகுதியில் வேலை செய்யும் போராளிகள் இத்தனையும் தாண்டித்தான் அந்த ஆக்கிரமிப்பு வலயத்தில் உள்நுழைய வேண்டும்.

உண்மையில் அந்தப் பிரதேசத்தில் எமது வாழ்வு என்பது எப்போதும் கத்தி முனையில் நடப்பதாகவே இருக்கும். ''பிரச்சனையில்லைப் போகலாம்'' என வேவு பார்த்து நடக்கிற போதில் திடீரென வேலியோர புற்களில் இருந்து துப்பாக்கி முனைகள் உயரும். கணப்பொழுதில் நெஞ்சில் திட்டம் ஒன்று விரிய, எங்களின் துப்பாக்கிகள் அனல் உமிழும். எதிரிகள் சிலரை வீழ்த்த, முற்றுகை உடையும், திக்குக்கு ஒன்றாய் சிதறி ஓடி மீண்டும் சொல்லப்பட்ட இடத்தில் சந்திக்கும் போது சில வேளைகளில் எங்களில் ஒருவனை நாம் இழந்திருப்போம்.

நகரத்து வீதிகளில் சைக்கிளில் கடக்கும் போது எதிரி கைதட்டிக் கூப்பிடுவான். நெஞ்சக் குழிகளில் நீர் வற்றும். என்ன செய்வோம் என சிந்திக்கும் முன் சைக்கிள் கான்ரிலில் பிடிப்பான். இறங்கி, ஐ. சி. தேடுவ தாய்பாசாங்கு செய்து, கைத்துப்பாக்கியை எடுத்து சடுதியாய்ச்சுட்டுவிட்டு ஓட, எதிரிகளின் துப்பாக்கி ரவைகளால் நின்ற இடம் சல்லடையாகும்.

எதிரி கலைக்கக் கலைக்க ஓடி, நாவரண்டு நீர்தேட, இரு நாளாய் உணவற்ற தேகம் ஓய்விற்கு மன்றாட, ஓர் வீட்டுக் கதவு தட்டி ''அம்மா! பசி தண்ணி '' எனக் கேட்கின்ற போதில் தொண்டை ஒட்டி கண்கள் இருளும்.

இப்படித்தான் ஒவ்வொரு கணமும் திகிலோடு கழிய எம் வாழ்வு நீளும். எனினும், பசியுடனும் நித்திரையற்ற விழிகளுடனும் விழிகள் இலக்குத் தேடும். எங்கள் நிலத்தை ஆக்கிரமித்தவனைப் பழிவாங்க நெஞ்சம் தன்னிடமிருக்கும் எஞ்சிய உணர்வுகளை ஒன்றாக்கி உணவு தரும்.

நித்திரை, குளிப்பற்று நீண்ட அலைச்சலின் பின் ஒரு வீட்டில் படுத்துவிட்டால், நாய்களின் குரைப்பொலி துயில் எழுப்பும். நடந்ததை உணர்ந்து சுதாரிக்கும் முன் வீட்டுப் படலை மிதிபடும், கதவுகள் தட்டப்பட நெஞ்சு சிலிர்க்கும், கைகள் கழுத்தில் குப்பியைத் தடவ, கடைசி நேர முயற்சிக்காய் உயிர்ப்பறவை ஆணையிடும். முன் கதவால் எதிரிக்கு குண்டு அடித்துவிட்டு, பின்கதவு திறந்து ஓடும்

## பயணித்தடம்



போது பாட்டியொருத்தி வழி சொல்வாள்.

''தம்பி, கோயிலடி எல்லாம் நிக்கிறான்களாம்''. இத்தனைக்குள்ளும் எங்கள் மக்கள் எங்களைக் காத்தார்கள். உணவற்று வந்த போது உணவு தந்து, காயப்பட்டு வந்த போது மருந்து தந்து, மறைவிடம் தேடியபோது மறைப்புத் தந்து, அவர்களின் சிறகுகளுக்குள்ளேயே எங்களின் ஒவ்வொரு கனமும் கழிந்தது.

எதிரியின் கண்காணிப்புகள் இறுகிய 1999ன் முற்பகுதியில் ஒரு நாள். எதிரி மிக நெருக்கமாக தன் முகாம்களை அமைத்து தன்னைப் பலப்படுத்தியிருந்தான். நகரமுமற்றுக், கிராமமுமற்றிருந்த அந்தக் கோப்பாய் - இருபாலைப் பகுதியில் இராணுவம் புகுந்தது. அது ஒரு தகவல் அறிந்த திடீர் சுற்றிவளைப்பு. ஆம் அங்கே போராளிகள் இருந்த தகவலை யாரோ ஒரு தேசத்துரோகி எதிரிக்கு சொல்லிவிட்டிருந்தான். திடீரெனச் சுற்றிவளைக்கப்பட்ட கிராமம் கலவரப்பட எதிரி அவன் இருந்த வீட்டை நெருங்குகிறான். முடிவு? ஒன்றேயொன்று தான்.

சண்டை! எதிரியுடன் சண்டையிடுவதைத் தவிர அங்கே நின்ற போராளிக்கு வேறு ஒரு வழியும் இருக்கவில்லை. நின்று நிதானித்து எதிரி நெருங்கச் சடசடக்கின்றது அவனது துப்பாக்கி.

அந்த ஆக்கிரமிப்பு பிரதேசத்தில் போராட்டத்தின் ஒரு இரகசிய வேலையை செய்து கொண்டிருந்த அவன், ஒரு விடுதலைப் போராளி. மக்களை நேசிக்கும், மக்களால் நேசிக்கப்படும் ஒரு கெரில்லா வீரன். தனது இலட்சியத்தை இறுதிவரை மறக்காத அவனது துப்பாக்கி சுடச்சுட ரவைகள் முடிகின்றன. எதிரியோ எண்ணிக்கையில் அதிகம். எப்போதும் வரலாம் எனக் காத்திருந்த அந்தப் போராளியின் சாவுக்கான நேரம் நிமிடக் கணக்கில் இருந்து செக்கன்களாக மாறிக்கொண்டிருந்தது. எதிரியிடம் உயிருடன் பிடிபடக் கூடாது என்ற விடுதலைப் புலிகளின் போரியல் மரபுப்படி அவன் தனது குப்பியை வாயினுள் வைத்துவிட்டு தன்னிடம் இறுதியாக எஞ்சியிருந்த கைக்குண்டின் கிளிப்பைக் கழற்றுகின்றான். நேரம் செக்கன்களாக நகர்ந்து கொண்டிருக்க அவன் தன் முடிவை மாற்றவில்லை. முடிவிற்கான வழியை மாற்றுகின்றான். வெடிக்கத் தயாரான குண்டை தனது முகத்தின் அருகில் கொண்டு வந்து தானும் குண்டுடன் சேர்ந்து வெடிக்கின்றான்.

அவன் தன்னை அழித்துக் கொண்ட முறை ஒரு சாதனை. அந்த இறுதிக் கணத்தில் அவனது மனக்கண்முன் தெரிந்தவை அவனை நேசித்த மக்கள். உணவு தந்து, மருந்து தந்து, தம் சிறகுக்குள் காத்த மக்களின் எதிர்காலம். அவனது முகத்தை இனம் கண்டு இராணுவம் செய்யப் போகும் விசாரணைகள். அதனால் அவனை ஆதரித்த மக்கள் படப்போகும் துன்பம். அவனது முகம் இனம் காட்டப்படுவதால் அம்பலமாகப் போகும் அவனது இரகசிய வேலைத் திட்டம். இவையே நிச்சயம் அவனை அவ்வாறு முடிவெடுக்கச் செய்தது.

மேஜர் சிலம்பரசன், தான் மட்டுமல்ல தன் சாவின் பின்னால் தன்னை இனம் காட்டும் முகம் கூட எதிரியிடம் அகப்படக் கூடாது என்பதற்காக, இதுவரை காலமும் தன்னைக் காத்த மக்கள் தன்னால் துன்பப்படக் கூடாது என்பதற்காக, அவன் எடுத்த முடிவு உன்னதமானது.

எதிரியிடம் பிடிபடும் சந்தர்ப்பத்தில், துப்பாக்கியில் ரவைகள் எல்லாம் முடிவடைந்த அந்த இக்கட்டான நிலையில், எல்லோரும் அடுத்த முடிவிற்காய் அந்தரிக்கும் அந்த இறுதிக் கணத்தில் அவன் கலங்கவில்லை. நிதானமாக முடிவெடுத்தான். அவன் குப்பி கடிக்கவில்லை. வெறுமனே குண்டை வெடிக்க வைக்கவும் இல்லை, தன் இறப்பின் மூலம் தன் முகமே சிதைய வேண்டும் என முடிவெடுத்தான். நினைக்க மயிர் கூச்செறிகின்றது.



''உலக 'வரலாற்றில் எங்கும், எப்போதும்' நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புக்களும் எமது தாயக மண்ணில் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன'' என்ற தலைவர் அவர்களின் கூற்றை வலுப்படுத்திச் சென்றவன் அந்தப் போராளி. அவனது வீரமான அந்த இறுதிநேரத் தீர்மானம், தன்னை நேசித்த மக்களை காக்க அந்த விடுதலைப் போராளி கொண்ட அவா, இவையே இன்றும் விடுதலைத் தேரை ஒரு மக்கள் போராட்டமாக அசைத்துக்கொண்டிருக்கின்றது. அவனைக் காத்த சிறகுகளை, அவனது அந்த உயரிய தீர்மானம் காத்துக்கொண்டதால், இன்றும் அதே சிறகுகளுக்குள் அவன் போன்ற விடுதலைப் போராளிகள். O

09.01.1997 நடுநிசி தாண்டிய அதிகாலைவேளை. ஆனையிறவு-பரந்தன் கூட்டுப் படைத் தளத்தினூடு புலிகளின் அணிகள் நகர்ந்துகொண்டிருந்தன. அந்தத் தளத்தின் அமைவிடம் வலிந்த ஒரு தாக்குதலுக்கு சாதகமற்ற பௌதிகச் சூழலைக் கொண்டிருந்தது. தரவைகள், உப்பு வெளிகள், சிறிய - சிறிய உவர் நீர்க் கடல்கள், இப்படித்தான் இருந்தது அந்தச் சூழல். எனினும் முகாமின் முக்கியத்துவம் நன்கு உணரப்பட்டிருந்தது. போராளிகள் அனைவரும் கண்களில் ஒரு வெறியுடன், ''எங்கள் மண்ணை ஆக்கிரமித்தவனை அழிக்க வேண்டும்'' என்ற மன உறுதியுடன் நீரற்ற அந்த உப்பு வெளிகளினூடு ஊர்ந்துகொண்டிருந்தனர். அது ஒரு நீண்ட நகர்வு. விடுதலைப் புலிகளின் போரியல் வரலாற்றிலேயே ஒரு வலிந்த தாக்குதலுக்காக, சண்டையை எதிர்பார்த்து எமது படையணிகள் நகர்ந்த நீண்ட நகர்வுகளில் அது குறிப்பிடத் தக்கது. எதிரியின் பிரதேசத்தை ஊடுருவிய நகர்வு. எங்காவது எதிரியால் அவதானிக்கப்பட்டால் அங்கே நகர்ந்து கொண்டிருக்கும் அத்தனை போராளிகளின் உயிரும் கேள்விக்குறியாகும் நிலை.

அங்கே நகர்ந்து கொண்டிருந்த அணிகளில் ஒரு அணியாகத்தான் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் அந்தக் குறிப்பிட்ட அணியும் நகர்ந்து கொண்டிருந்தது. முகாமின் ஒரு முக்கிய பகுதியைக் கைப்பற்றும் பணி அவர்களுடையதாக இருந்தது. சிக்கலான அவர்களின் அன்றைய பணியில் எமக்குக் கிடைக்கப் போகும் வெற்றியின் ஒரு கணிசமான பகுதி தங்கி நிற்கிறது.

சண்டை தொடங்கிவிட்டிருந்தது. அவர்களுக்குரிய பாதை வழியாக அந்தக் குறிப்பிட்ட அணியும் சண்டையைத் தொடங்கியிருந்தது. முட்கம்பி வேலிகளை 'டோப்பிட்டோ' குண்டுகள் தகர்க்க, அணி ஒவ்வொரு தடையாகத் தாண்டி நகர்ந்து கொண்டிருந்தது. எதிரியின் இயந்திரத் துப்பாக்கிகள் இவர்களை நோக்கிச் சடசடக்க; அப்போதுதான் அந்தப் பாதையில் உள்ள பிரச்சனை தெரிந்தது அவர்களுக்கு.

ஆம் ஏற்கனவே எமது வேவுத் தரவின்படி அங்கேயிருந்த முட்கம்பிச்சுருள் தடைகளைவிட புதிதாக இன்னுமொரு முட்கம்பிச்சுருள்த் தடையை எதிரி அமைத்திருந்தான். 'செக்கன்' களும் சண்டையின் முடிவைத் தீர்மானிக்கும் ஒரு இக்கட்டான நேரம். நாம் அந்தத் தடையை தாண்டி உள்நுழையாவிட்டால் எதிரி தன்னைத் தயார்ப்படுத்தக்கூடும். பின்னர் அந்தப் பகுதியைக் கைப்பற்றுவது இயலாமல்க்கூடப் போய்விடும். புதிதாகக் கிடந்த தடையை உடைக்க 'டோப்பிட்டோ'வும் கைவசம் இல்லாத நிலை. மஃற்று வழிகளை பரிசீலிக்கக்கூட நேரம் இல்லாத ஒரு இக்கட்டான சூழல். முட்கம்பியை வெட்டச் சென்ற எங்கள் தோழனும் அரைவாசிக் கம்பிகளை வெட்டிய நிலையில் எதிரியின் ரவைபட்டு வீழ்ந்துவிட, எதிரி அந்த இடத்தில் முட்கம்பிகள் வெட்டப்படாமல் இருப்பதையும், நாம் அவற்றை வெட்ட முயற்சிப்பதையும் கண்டு கொண்டான். அவன் தன் முழுச் சூட்டு வலுவையும் இப்போது அங்கே மையங்கொள்ள வைத்தான். அது ஒரு வார்த்தைகளின் வர்ணனைக்கு அப்பாற்பட்ட இறுக்கமான சூழல். அன்றைய சண்டையின் முடிவைத் தீர்மானிக்கும் ஒரு அணி அங்கே தடையை உடைக்க முடியாமல் நிற்க,

( 09ஆம் பக்கம் பார்க்க )



www.eelamview.com

www.eelamview.com



# சமரும் மருத்துவமும்

- தூயவன் -

அருகிலிருப்பவற்றையே அவதானிக்க முடியாத அந்தகார இருள். அதற்கு வலுச்சேர்ப்பதற்காக வானத்து நட்சத்திர ஒளி வருகைக்குத் தடைவிதிக்கும் மழை மேகங்கள். அவை தெளிக்கும் நன்னீர்த் துளிகள் உடலைக்குளிர்விக்கும் நேரம். தங்கள் பாதம் பதியும் அன்றி மூச்சு விடும் ஓசையோ அவர்கள் செவிகளையே சேரக்கூடாத அவதானத்துடன் கரும்புலிகள் அணி ஒன்று ஆனையிறவுத் தளத்தை ஊடறுத்துச் செல்கின்றது. அவர்களின் இதய ஓசை மட்டுமே அவரவர் செவிப்பறையை அதிர்விக்கின்றது. தங்கள் சிறு அவதானமின்மையும் எதிரியை உசாரடையச் செய்து விடலாம். 'கரணம் தப்பினால் மரணம்' என்பது இவர்களுக்கு மட்டுமன்று இவர்களால் பெற்றுக் கொடுக்கப்பட இருக்கும் வெற்றி தேவதைக்கும் என்பது அனுபவங்களின் பாடம்.

மேற்படி எண்ணங்களால் சூழப்பட்ட வண்ணம் அவ்வணி நகர்கின்றது. அப்பொழுது அவர்களில் ஒருவர் காலில் பாம்பு ஒன்று தன் பல்வரிசையைப் பதிக்கின்றது. 'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்பர். ஆனால் இவர்களிற்குப் பயம் மறந்து பல காலம் ஆகிவிட்டது. எதிர்பார்க்கப்பட்ட ஆபத்துக்களை எதிர்கொள்வது ஒப்பீட்டளவில் இலகுவானதே. இதற்கமைய பாம்பினால் கடியுண்டவர் களமருத்துவர் ஒருவருடன் இணைந்து இருவருமாகப் பற்றையொன்றினுள் புகுந்து, பதுங்கி, பாதுகாப்பாகத் தம்மை உருமறைத்துக் கொள்கின்றனர்.

தரைவாழ் பாம்பினங்களில் 70% ஆனவை நஞ்சற்றவை. எனவே கடித்த பாம்பு ஆபத்தற்றதாக இருப்பதற்கு சந்தர்ப்பங்கள் அதிகம். ஆயினும் அதனை உறுதிப்படுத்தல் வேண்டும். நஞ்சினால் நரம்பு மண்டலம் தாக்கப்படவில்லை என்பதனை மேலெழுந்தவாரியாக உறுதி செய்யலாம். குருதியானது பத்து நிமிடமளவில் உறைவதனை அவதானிப்பதன் மூலமே குருதியிழையமும் தாக்கப்படவில்லை என்பதனை உறுதி செய்யலாம். இதனைச் செய்வதற்கு வெளிச்சம் வேண்டும். எதிரியின் குகையினுள் ஏற்படுத்தப்படும் சிறு வெளிச்சமும் மலைமேல் விளக்காகும். கற்பனை கடந்த ஆபத்துக்களைக் கண் எதிரே கொண்டு வரும். எனினும் செயற்பட்டேயாக வேண்டும். ஒருவாறு மெல்லிய ஒளிக்கதிரின் உதவியுடன் நாளமொன்றிலிருந்து வெளியெடுக்கப்பட்ட குருதியானது உறையவிடப்படுகின்றது. கடித்த பாம்பு நஞ்சற்றது என்பது உறுதி செய்யப்படுகின்றது. மேற்படி கரும்புலியணியின் பலம் மீளவும் உறுதி செய்யப்படுகின்றது. இதனால் இவ்வணி தனது தாக்குதலிலக்கை வெற்றிகரமாக நிறைவேற்றி இழப்புகள் எதுவுமின்றி மீள்கிறது. ஓயாத அலை- 2ன் வெற்றி எமதாகின்றது.

01. 02 .98 அதிகாலை அம்மருத்துவ முகாம் மிகத் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. முதல் நாள் இரவு கிளிநொச்சி இராணுவத்தளம் மீதான வலிந்த தாக்குதலின் போது காயமுற்றவர்களுக்கு அவசர சிகிச்சைகள் அளிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. விரைந்து வரும் வாகனங்களில் இருந்து இறக்கப்படுபவர்களுக்கு முதலுதவியளித்தல், சிறு சத்திர சிகிச்சைகள் செய்தல், குருதி, திரவ ஊடகம் ஏற்றுதல், அவர்களை உடனுக்குடன் இடம்மாற்றுதல் போன்ற பல்வேறு பணிகள் வேகமாக இடம் பெற்ற வண்ணமுள்ளன. அப்போது வானில் வட்டமடிக்கும் 'கிபிர்' குண்டு வீச்சு விமானங்களின் இரைச்சல் விட்டு விட்டுத் தரையையும் வானையும் அதிர்விக்கின்றது. இம்முகாம் தாக்கப்படலாம் எனும் ஐயம் எழுகின்றது. உடனேயே எல்லோரும் காயமடைந்தவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றவும், நிலக்கீழ் பதுங்ககழியினுள் கொண்டு செல்லவும் முயற்சிக்கின்றனர். அதற்குப் போதிய அவகாசம் இல்லாமலேயே மருத்துவ முகாம் வான்தாக்குதலிற்குள்ளாகின்றது. இதன் போது பூநகரி வெற்றித்தாக்குதல் முதல் இன்று வரையான சமர்களில் பல போராளிகளின் உயிர் காத்த இராணுவ மருத்துவர்களான மேஜர் சுசில், மேஜர் ரோகினி மற்றும் களதள மருத்துவப் பொறுப்பாளர்களான மேஜர் திவாகர், மேஜர் எஸ்தர் உட்பட 43 பேர் வீரச்சாவடைகின்றனர். மேற்படி கசப்பான அனுபவங்கள் தொடராமல் இருப்பதற்காகத் தொடர்ந்த தாக்குதல் திட்டமிடல்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. இது ஓயாத அலை 2ல் வெளிப்பட்டது.

ஆகாயக்கடல் வெளித்தாக்குதல், தவளைப் பாய்ச்சல் தாக்குதல் போன்ற சமர்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகள் காயமடைந்தனர். இவர்களைத் தன்னுள் அரவணைத்துக் காத்தது யாழ். போதனா வைத்தியசாலை,



இதன்போது இங்கு பணியாற்றிய நூற்றிற்கு மேற்பட்ட மருத்துவர்களும் ஆயிரத்திற்கும் அதிகமான பணியாளர்களும் தங்கள் உயிர் காக்கும் பணிக்குச் சிகரம் வைத்தனர். இவ்வளம் எம்போரிடும் ஆற்றலிற்குப் பெரும் வலுச் சேர்த்துக் கொண்டிருந்தது. இதனையும் இது போன்ற ஏனையவற்றையும் இல்லாதொழிப்பதற்கு எதிரி தன்னாலான எல்லாவற்றையும் செய்வான் என்பதில் ஐயம் இருக்கவில்லை. இதற்கான மாற்றீடுகளைப் பெறுவதற்கான தலைவர் அவர்களின் திட்டங்கள் சில வருடங்களுக்கு முன்னரேயே செயல் வடிவம் பெறத்தொடங்கியிருந்தது.

1993ல் மணலாற்றில் நடைபெற்ற கொக்குத்தொடுவாய்த் தாக்குதலின் போது களமுனையில் இருந்து யாம் மருத்துவமனையினர் சென்றடைவதற்குப் பல பத்து மைல் பயணிக்க வேண்டியிருந்தது. கிளாலி நீரேரியைக் கடக்கவும் சில மணி நேரம் செலவழிக்க வேண்டியிருந்தது. இதன் போது காப்பாற்றப்படக் கூடியவர்கள் எனக் கணிக்கப்பட்டவர்கள் வீரச்சாவடைந்தமை, பாதிப்பிற்குள்ளான குருதிக் கலன்கள் காலதாமதம் காரணமாக நிறுத்த முடியாமல் போனதால் பலர் தம் அங்கங்களை இழந்தமை, பயண இடர்பாடுகளின் போது அவர்கள் அனுபவித்த மேலதிக வேதனைகள் என பல காரணிகள் எம் மனங்களை உறுத்தின. பலமாகச் சிந்திக்க வைத்தன. நாங்கள் போர்ச் சத்திர சிகிச்சை செய்வதில் கணிசமான அளவு முன்னேறுவோமாயின் மேற்படி பின்னடைவுகளைத் தவிர்க்கலாம் என உணர்ந்தோம்.

முல்லைச்சமரில் விழுப்புண்ணடைந்த போராளி ஒருவர் தனது எண்ணவோட்டங்களைப் பின்வருமாறு கூறினார். "நாங்கள் பிரச்சினையில்லாமல் நகர்ந்து எங்களுக்குரிய இடங்களில் நிலையெடுத்து விட்டோம். மற்ற இடங்களும் குழம்பின மாதிரித் தெரியவில்லை. அதனால இத்தாக்குதலில் பூரணமாக வெல்லுவோம், அதில் சந்தேகம் இருக்கவில்லை. ஆனால் காயமடைந்தால் என்ன செய்கிறது? முந்தியென்டாலும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி இருந்தது." பல நூறு போராளிகள் காயமடைவர் என்பது வெளிப்படையானது. இதனால் இப்படியான மனநிலை அவர்களுக்கு ஏற்படுவது இயற்கையானதே. இத்தாக்குதல் நடைபெற்ற முதல் இரண்டு நாட்களிலேயே ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். இதன் போது ஏற்பட்ட மருத்துவப் பளுவிற்கு வெற்றிகரமாக முகம் கொடுத்தோம். இதனால் மருத்துவம் தொடர்பாக எம்மவர் மத்தியில் இருந்த சந்தேகம் தீர்க்கப்பட்டது. இது அவர்களுக்கு மேலதிக உளவியல் பலத்தைக் கொடுத்தது.

இச்சமரினைத் தொடர்ந்து சத்ஜய, ஜயசிக்குறுப் சமர்களில் ஏற்பட்ட அனுபவங்களின்

( 11ஆம் பக்கம் பார்க்க )





www.eelamview.com

# கிளிநொச்சிப் புதைகுழி

## அம்பலமாகும் அரசின் மூடிமறைப்புகள்

இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட கிளிநொச்சி நகரில் சிங்களப் படைகளால் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்களைக் கொண்ட பெரும் மனிதப் புதைகுழி இருப்பது உறுதியாகியிருக்கிறது. கிளிநொச்சி நகர் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில், அப்பகுதியில் காணாமற்போன நூற்றுத்தொண்ணூறுக்கும் மேற்பட்ட தமிழர்களே படுகொலை செய்யப்பட்டு அங்கு புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. இவர்களில் 25 பேரின் எலும்புக்கூடுகள் இதுவரை துப்பரவு செய்யப்பட்ட மலக்குழிகளில் இருந்து கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. தமது உழைப்பாளர்களைப் பறிகொடுத்து எங்காவது அவர்கள் உயிரோடு இருக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்த குடும்பங்களுக்கு கிளிநொச்சி நகரில் இருந்து கண்டெடுக்கப்பட்டிருக்கும் எலும்புக்கூடுகள் அதிர்ச்சியை கொடுத்தது. இந்நிலையில் ஏனைய இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசங்களில் இருந்து வெளிவரும் புதைகுழிக் கதைகளும், யாழ்ப்பாணத்தில் இராணுவச் சிப்பாய்கள் வெளியிடும் செம்மணிக்கதைகளும் எலும்புக்கூடுகள் இன்னும் கண்டெடுக்கப்படாத குடும்பங்களிடம் போலித்தனமாக இருந்த நம்பிக்கையைக் கூட போட்டுடைத்துக் கதிகலங்க வைத்துள்ளது.

சிங்களப் பேரினவாத அரசின் நவீன அணுகுமுறை மூலம் மூடிமறைக்கப்பட்டுவரும் தமிழின அழிப்பு, செம்மணிப் புதைகுழி மூலம் சர்வதேசத்தின் முன் அம்பலப்பட்டிருக்கிறது. தமிழர் நிலங்களை ஆக்கிரமித்திருக்கும் சிங்களப் படைகள் அங்கு என்ன வேலைசெய்கின்றனர் என்பதற்கு சம்மந்தப்பட்ட சிங்களச் சிப்பாய்கள் வெளியிடும் வாக்குமூலங்களே சான்றுகளாகிவிட்டன. ''மேலதிகாரிகளால் தினசரி அனுப்பப்படுகின்ற சடலங்களைப் புதைப்பதே எமது வேலையாக இருந்தது. அப்படி எம்மிடம் புதைக்கத் தந்த சடலங்களில் ஒன்று பாடசாலை மாணவி கிருசாந்தி குமாரசுவாமியினுடையதாக இருக்கலாம். அதைத்தவிர அந்தக் கொலைக்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை'' என்று கிருசாந்தி கொலைவழக்கில் மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட ராஜபக்ச என்ற படைவீரன் யாழ்ப்பாண ஆக்கிரமிப்பு பிரதேசத்தில் தனக்கும் தனது சகாக்களுக்கும் தரப்பட்ட கடமை என்ன என்பதை யாழ் நீதிமன்றத்திலே தெரிவித்திருக்கின்றான்.

இவ்வாறு ஈவிரக்கம் இன்றி எமது மக்களை கொன்று குவித்து, தனது திட்டமிட்ட கொடூரமான இன அழிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றி வரும் சிங்களப் பேரினவாதம், அவ்வப்போது தவிர்க்க முடியாது வெளிவந்துவிடும் புதைகுழி விவகாரங்களை இராணுவச் சிப்பாய்களின் தனிப்பட்ட அத்துமீறல்களாகக் காட்டி விசாரணைகள் என்ற போர்வையில் அவற்றை மூடிமறைத்து விடுகிறது. இந்த வகையில் உலகின் கவனத்தை ஈர்த்துவிட்ட கிருசாந்தி குமாரசுவாமி கொலைவழக்கில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் அழுத்தங்களில் இருந்து தப்பிக்க தனது கட்டளைகளையே நிறைவேற்றிய சாதாரண இராணுவச் சிப்பாய்கள் சிலருக்கு மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கி பேரினவாதம் போலி நாடகம் ஆடியது. இதன் மூலம் கிருசாந்தி கொலைக்கான பழியையும் தனிப்பட்ட இராணுவச் சிப்பாய்களின் அத்துமீறல்களாகக் காட்டி தான் தப்பித்துவிட எண்ணியது.

ஆனால் 'எங்களை மட்டும் மாட்டிவிட்டுத் தப்பிக் கொண்டார்களே' என்ற ஆதங்கத்திலும், மரண பயத்திலும் மரணதண்டனைக் கைதிகள் பேரினவாதத்தின் படுகொலை நாடகத்தில் ஒன்றை அம்பலப்படுத்தி விட்டார்கள். இந்நிலையில் தொடர்ந்து அம்பலமாகும் தமிழர் மீதான தனது படுகொலை நடவடிக்கைகளை வெறும் இராணுவ அத்துமீறல்களாகக் காட்டி தனது திட்டமிட்ட அரச பயங்கரவாத நடவடிக்கைகளை சிங்களத்தால் மூடி மறைத்து விட முடியுமா?

இதுவரை ஆயிரக்கணக்கானோர் காணாமற்போய்விட்ட குடாநாட்டில், இன்னமும் வெளித்தெரியாது மூடிமறைக்கப்பட்டிருக்கும் புதைகுழிகள்தான் எத்தனை? யாழ்குடா நாட்டில் மட்டும்தான் எமது மக்களுக்கு இத்தகைய அவலவாழ்வா? இராணுவத்தின் இறுக்கமான பிடிக்குள் இருக்கும் தென்தமிழீழத்தில் எத்தனையென்று எண்ணிக்கணக்கிடப்படாது பல்லாயிரம் தமிழ் மக்கள் சிங்களத்தால் படுகொலை செய்யப்பட்டு அந்த நிலங்களிற்குள்ளேயே மூடிமறைக்கப்பட்டுவிட்டார்கள்.

**– அ. தீபன் –**

### கிளிநொச்சிப் பகுதியில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்களுள் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக்கிளையில் பதிவு செய்யப்பட்ட 184 பேரின் விபரம்

| இல. | பெயர் | வயது |
|---|---|---|
| 01 | இராமையா முத்தையா | 55 |
| 02 | கந்தையா கிருஸ்ணராசா | 22 |
| 03 | ஆறுமுகம் முத்துலிங்கம் | — |
| 04 | மாணிக்கம் இரத்தினசிங்கம் | 38 |
| 05 | இராமையா தங்கையா | 45 |
| 06 | தர்மலிங்கம் புஸ்பராணி | 24 |
| 07 | பிரான்சிஸ் டானியல் | — |
| 08 | மாமுத்து அல்லப்பிச்சை | 64 |
| 09 | நாகலிங்கம் இராஜேந்திரன் | 37 |
| 10 | இராமசாமி மெய்யழகு | 25 |
| 11 | கந்தையா ரவி | 22 |
| 12 | மைக்கல் ரஞ்சன் | 23 |
| 13 | இராமசாமி நித்தியசிவன் | 28 |
| 14 | சின்னையா ஜோகேஸ்வரன் | 24 |
| 15 | இராமசாமி காந்தகுமார் | 23 |
| 16 | இராமசாமி நடராசா | — |
| 17 | தங்கவேல் தர்மராஜா | 29 |
| 18 | தங்கவேல் திருச்செல்வன் | 21 |
| 19 | இராமசாமி சுந்தரலிங்கம் | 32 |
| 20 | கந்தசாமி கணேசன் | 27 |
| 21 | செல்லையா கணேசன் | 34 |
| 22 | சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை | 30 |
| 23 | மோகன் ராஜதுரை | 43 |
| 24 | குமாரசாமிதேவர் தேவச்சந்திரதேவர் | 49 |
| 25 | சௌந்தர் பாஸ்கரன் | 25 |
| 26 | விரையா செல்வராஜா | 37 |
| 27 | முத்தையா தர்மலிங்கம் | 41 |
| 28 | சின்னத்துரை சபாலிங்கம் | 43 |
| 29 | டேவிட் மரியதாஸ் | 30 |
| 30 | விரையா சிவராசா | 36 |
| 31 | இரத்தினம் சிவகுமார் | 22 |
| 32 | மகாலிங்கம் ஜெயலிங்கம் | 23 |
| 33 | மாரிமுத்து செல்வநாயகம் | 47 |
| 34 | அன்ரன் ஜோசப் றிலோஜன் | 20 |
| 35 | கதிரவேல் பாலசுப்பிரமணியம் | 14 |
| 36 | பெருமாள் செல்லத்துரை | — |
| 37 | ஆரோக்கியம் தேவசகாயம் | 39 |
| 38 | முனுசாமி நடராஜா | 49 |
| 39 | முத்து சிவலிங்கம் | 36 |
| 40 | வைத்திலிங்கம் தவராஜா | 35 |
| 41 | தங்கவேல் சத்தியமூர்த்தி | 23 |
| 42 | தங்கவேல் சந்திரகுமார் | 20 |
| 43 | அண்ணாமலை இராமச்சந்திரன் | 33 |
| 44 | கண்ணன் கரன் | 22 |

| இல. | பெயர் | வயது |
|---|---|---|
| 45 | வேல் விஜயகுமார் | 35 |
| 46 | குப்பன் சுப்பிரமணியம் | 31 |
| 47 | பிச்சைமுத்து அண்ணாமலை | 57 |
| 48 | கணபதி இராமச்சந்திரன் | 26 |
| 49 | சரவணமுத்து சற்குணராஜா | 42 |
| 50 | முருகேசு பாலேஸ்வரன் | 23 |
| 51 | வாரித்தம்பி முருகேசு | 63 |
| 52 | நல்லையா விஸ்வநாதன் | 33 |
| 53 | கறுப்பையா நாகேந்திரன் | — |
| 54 | இராமையா மோகன் | 41 |
| 55 | நாகலிங்கம் குருசாமி | 54 |
| 56 | சங்கரப்பிள்ளை அரியரத்தினம் | 50 |
| 57 | தாமோதிரப்பிள்ளை செல்வரத்தினம் | 58 |
| 58 | இராமசாமி சபாபதி | 59 |
| 59 | விரையா நடேசு | 61 |
| 60 | நாடார் சுப்பிரமணியம் | 50 |
| 61 | வேலுப்பிள்ளை உதயகுமார் | 40 |
| 62 | கிருஸ்ணா குமார் | — |
| 63 | தங்கவேல் கதிரேசு | 18 |
| 64 | மகாலிங்கம் சுப்பையா | 61 |
| 65 | ஐயாத்துரை கணேசமூர்த்தி | 36 |
| 66 | மாரிமுத்து முருகேசு | 43 |
| 67 | செல்லத்துரை செந்தில்நாதன் | 40 |
| 68 | அன்ரனிப்பிள்ளை மரியசீலன் | 37 |
| 69 | வினாசி நவரட்ணம் | 35 |
| 70 | வினாசி நாயரட்ணம் | 40 |
| 71 | தயாளகுணம் தனேஸ்வரன் | 18 |
| 72 | நாகமுத்து கிருஸ்ணலிங்கம் | 19 |
| 73 | சுப்பிரமணியம் கனகலிங்கம் | 36 |
| 74 | முருகையா குணநாயகம் | 30 |
| 75 | அப்பாத்துரை செல்வகுமார் | 30 |
| 76 | சுந்தரம் கண்ணதாசன் | 28 |
| 77 | லட்சுமணன் லட்சுமணன் | 28 |
| 78 | மரியாம்பிள்ளை ஜோகி | 42 |
| 79 | சின்னத்துரை ரட்ணம் | 47 |
| 80 | கந்தையா சிவலிங்கம் | 40 |
| 81 | பொன்னையா முத்துக்குமார் | 39 |
| 82 | சின்னத்தம்பி பரமேஸ்வரன் | 39 |
| 83 | குப்புசாமி ராஜன் | 23 |
| 84 | S.தங்கவேல் | — |
| 85 | சிவக்கொழுந்து நாகரத்தினம் | 52 |
| 86 | நாகலிங்கம் சிறிகாந்தன் | 40 |
| 87 | செல்லையா நந்தகுமார் | 19 |
| 88 | கோபாலப்பிள்ளை பாஸ்கரன் | — |

| இல. | பெயர் | வயது |
|---|---|---|
| 89 | இரத்தினவேல் தங்கவேல் | 45 |
| 90 | இராமன் சின்னையா சிறிபாலன் | 29 |
| 91 | இடும்பன் கணேசு | 30 |
| 92 | தெய்வராஜா நிர்மலன் | — |
| 93 | கந்தையா நகுலேஸ்வரன் | 32 |
| 94 | பொன்னம்பலம் தர்மலிங்கம் | 49 |
| 95 | பரராஜசிங்கம் ரஜீவன் | 26 |
| 96 | நவரத்தினம் ராஜேஸ்வரன் | 26 |
| 97 | வேல் ரவிக்குமார் | 27 |
| 98 | சண்முகலிங்கம் இளங்கோ | 30 |
| 99 | சின்னையா யோகேஸ்வரன் | 25 |
| 100 | தங்கவேல் உமாகிருஸ்ணன் | 24 |
| 101 | சிற்றம்பலம் கணபண்டிதர் | 55 |
| 102 | சுப்பையா தேவதாஸ் | 25 |
| 103 | முருகையா ஸ்ராலின் குணநாயகம் | 31 |
| 104 | கறுப்பன் செல்வராஜா | 42 |
| 105 | அரியத்துரை துரைராஜா | 34 |
| 106 | வைரமுத்து பாலேஸ்வரன் | 36 |
| 107 | வைரவன் செல்வராஜா | 43 |
| 108 | சண்முகலிங்கம் பரமேஸ்வரன் | 29 |
| 109 | ரத்தினம் துரைசாமி | 59 |
| 110 | துரைசாமி தவராஜா | 22 |
| 111 | கணபதி இராமச்சந்திரன் | 22 |
| 112 | இராசையா கனகரட்ணம் | 37 |
| 113 | மார்க்கண்டு சிறிதரன் | 29 |
| 114 | வாரித்தம்பி முருகேசு | 63 |
| 115 | அருளானந்தம் சங்கரதாஸ் | 17 |
| 116 | வேல் விஜயகுமாரன் | 35 |
| 117 | கார்த்திகேசு சிறிகாந்தன் | 46 |
| 118 | இராசலிங்கம் சண்முகதாஸ் | 22 |
| 119 | செல்லத்தம்பி சுப்பிரமணியம் | — |
| 120 | கறுப்பையா செல்வராஜா | — |
| 121 | க. இரத்தினசிங்கம் | — |
| 122 | செல்லத்துரை கிருஸ்ணகரன் | 27 |
| 123 | அருளானந்தன் சங்கரதாஸ் | 45 |
| 124 | ஜெகனாதன் இராஜதரன் | 24 |
| 125 | இராமசாமி பத்மநாதன் | 35 |
| 126 | வீரமலை ஆறுமுகம் | 45 |
| 127 | செல்லத்துரை கணேசமைந்தன் | 17 |
| 128 | ஜோன்பிள்ளை அரியரத்தினம் | 43 |
| 129 | இராஜரத்தினம் விஜிதரன் | 22 |
| 130 | நந்தகோபாலன் ஜீவன் | 19 |
| 131 | முத்துசாமி மகேந்திரன் | 25 |
| 132 | சியாமளா செல்வராஜா | 22 |
| 133 | பூதத்தம்பி நாகராஜா | 52 |
| 124 | சின்னத்துரை வேல்முருகன் | 47 |
| 135 | வேல்முருகன் சுரேஸ்குமார் | 25 |
| 136 | சின்னராஜா சிறிஸ்கந்தராஜா | 28 |
| 137 | கந்தையா கனகராஜா | 32 |
| 138 | வேலாயுதன் ஜோகேஸ்வரன் | 35 |
| 139 | கந்தையா நாகேஸ்வரன் | 16 |
| 140 | சின்னத்துரை சபாலிங்கம் | 41 |
| 141 | விரையா சிவராஜா | 30 |
| 142 | துரைசாமி மோகன சுந்தரம் | — |

www.eelamview.com

ஒவ்வொரு சிங்களப்படை முகாம்களுமே தமிழர்களின் புதைகுழிகளைக் கொண்டவை எனக் கருதப்படும் தென்தமிழீழத்தில், ''யாழ் துரையப்பா விளையாட்டரங்கப் புதைகுழி போன்று கிழக்கில் சத்துருக்கொண்டான் நாவலடி விளையாட்டுத் திடலில் மனிதப்புதை குழிகள் காணப்படுகின்றன. இப்புதைகுழி களைத் தோண்ட விளையாட்டு அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என மட்டக் களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில் கேட்டுக்கொண்ட போது அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் அரசினால் எடுக்கப் படவில்லை.

இந்நிலையில் இராணுவ ஆக்கிரமிப்பி லிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட கிளி நொச்சி நகரில் இராணுவத்தால் கைது செய் யப்பட்டு காணாமற்போன தமிழ் மக்களின் எலும்புக்கூடுகள் சில வெளிவந்திருக்கின்றன. இவை நூற்றுத் தொண்ணூறிற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் காணாமற்போன கிளிநொச்சிப் பகுதியில் இருக்கக்கூடிய பெரும் புதைகுழி களை உறுதி செய்வதாக அமைந்திருக்கின்றன.

சிங்களப்படைகள் சத்ஜய நடவடிக்கை மூலம் கிளிநொச்சியை ஆக்கிரமித்து அங்கு நிலைகொண்டிருந்த சுமார் இரண்டு வருட காலத்தில் சுமார் 250 வரையான தமிழ் மக்கள் அப்பகுதியில் காணாமல் போயிருந்தார் கள். இவர்களின் பெற்றோர், உறவினர்களால் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளைக்குக் கொடுக்கப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் 234 அங்கத்தவர்கள் சிங்களப் படைகளால் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இவர்களில் கண்டுபிடிக்கப்பட்ட 42 பேர் தவிர்ந்த ஏனைய 192 பேர் இன்ன மும் காணாமற்போனவர்களாகவே இருக்கிறார் கள். காணாமற்போனவர்களில் எட்டுப்பேர் சிங்களப் படைகளால் கொல்லப்பட்டனர் என ஏற்கனவே உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதே வேளை மீட்கப்பட்ட கிளிநொச்சி நகரில் மக் கள் குடியேறிய பகுதிகளில் துப்பரவு செய்யப் பட்ட மலக்குழிகளிலிருந்து இதுவரை 25 வரை யான எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன.

இந்நிலையில் கிளிநொச்சி மாட்ட மேலதிக பதிவாளர் திருமதி நா. செல்வராஜா அவர்க ளுக்கு கொழும்பு பதிவாளர் நாயகத்தினால் மார்ச் 19,1999 திகதியிடப்பட்டு அனுப்பி வைக் கப்பட்ட சுற்றறிக்கையின்படி, காணாமற்போய் ஒரு வருடம் பூர்த்தியாகியவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குவதற்கான பதிவுகளை மேற் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இவ் வேண்டுகோளுக்கு இணங்க 68 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளதோடு இவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங் குவதற்கான நடவடிக்கைகளும் அரசால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. எஞ்சியவர்களில் பலருடைய உறவினர்கள் வன்னியில் இல்லாத தாலும்,இன்னமும் தங்கள் உறவுகள் உயிரோடு இருப்பார்கள் என்ற நப்பாசை காரணமாகவும் மீதிப்பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

சர்வதேசத்தையும், தமிழ் மக்களையும் ஏமாற் றும் சிங்கள அரசின் திட்டமிட்ட இனஅழிப்பு நடவடிக்கை, அது விரும்புவது போலவே மௌனமாக உறங்கிவிடக்கூடியதா? ஒரு வருட மாக காணாமற் போனவர்களை இறந்தவர் களாகக் கருதும்படியான அரசின் அறிவிப்பும் கிளிநொச்சிப் பிரதேசத்தில் இதுவரை மீட்கப் பட்ட மனித எலும்புக்கூடுகளும், கிளிநொச்சிப் பகுதியில் சிங்களம் உருவாக்கிவிட்ட மனிதப் புதைகுழியை அம்பலப்படுத்திவிட்டது. தமது உறவுகளைக் காணாது தம்மிடம் முறையிட்ட மக்களுக்கு பதில் சொல்ல முடியாது இதுவரை மௌனம் காத்த சர்வதேச அமைப்புக்கள் தமது பணியைச் செய்வதன்மூலம் எமது உறவுகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை சர்வதேசத் திற்கு வெளிப்படுத்தி, தொடர்ந்துகொண்டிருக் கும் சிங்களத்தின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு முடிவுகட்ட வேண்டும் என்பது எமது மக்களின் எதிர்பார்ப்பு.

1996ம் ஆண்டு முல்லைத்தீவு தாக்குதலின் பின் யாழ்ப்பாணம் தென்மராட்சியில் இராணு வத்தினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற் போய்விட்ட 39 இளைஞர்களுள் அதிஸ்ரவசமாக உயிர் தப்பிய ஒரு இளைஞன் மேலும் இரு கொலைசெய்யப்பட்ட இளைஞர்களின் சடலங் கள் மத்தியில் மலக்குழி ஒன்றினுள் இருந்து குற் றுயிராய் மீட்கப்பட்டான். இன்னமும் உயி ரோடு இருக்கும் அந்த மனித உடல், தன்னிடம் விசாரணை நடத்திய சர்வதேச மன்னிப்புச் சபையிடம் தெரிவித்தவை இங்கு நினைவு கூரு வதற்கு பொருத்தமானவை.

''இராணுவத்தினர் என்னைத் துப்பாக்கி யரல் அடித்து, நான் விழும்வரை தாக்கினார் கள். பின் எனது கையையும் காலையும் ஒன்றா கக் கட்டினார்கள். இதனால் சுவாசிப்பதே கஸ்ரமாக இருந்தது. அதன் பின் எனது கழுத் தில் ஒரு துணியைச் சுற்றி அதை இருபுறமும் இழுப்பதன் மூலம் எனது கழுத்தை நெரித்தார் கள். இதன் பின் துவக்கில் பொருத்தப்பட்டிருந்த கத்திமூலம் என்னை வெட்டினார்கள். ஒரு இராணுவத்தினன் எனது முதுகில் ஆறு இடங் களில் கத்தியால் குத்தினான். இதன் பின் எனது கழுத்தை வெட்டினார்கள். எனது கழுத்தைச் சுற்றி துணி இருந்ததால் அது எனக்கு பெரிய காயத்தை ஏற்படுத்தவில்லை. இதன் பின் ஒருவன் எனது தலையில் வெட்டினான். எனக்கு இது பலத்த காயத்தை ஏற்படுத்தியது. நான் நினைவிழந்தேன்.''

''இந்தநிலையில் எனது கைவிரலில் இருந்த மோதிரங்களைக் கழற்ற அவர்கள் முயல்வதை என்னால் உணரமுடிந்தது. அது முடியாமல்ப் போகவே அவர்கள் எனது இரு விரல்களையும் வெட்டினார்கள். நான் மீண்டும் உணர் விழந்தேன்''

''எனக்கு உணர்வு வந்தபோது நான் ஒரு மலக்கூட குழிக்குள் வீசப்பட்டிருப்பதை உணர்ந் தேன். அங்கிருந்த பூச்சிகள் எனது காயங்களைக் கடித்ததில் நான் கத்தினேன்'' இவ்வாறு குற் றுயிராய்க் கிடந்து துடித்த அந்த மனிதனின் அவலக்குரலை, அதிஸ்ரவசமாக அப்பகுதியால் அவரைத் தேடிவந்த அவரது பெற்றோர் கேட் டதால் அவன் மலக்குழியில் இருந்து மீட்கப் பட்டான்.

இதுபோலவே சிங்களத்தின் இன்னும் பல கொலைமுறைகளை அனுபவித்து வெளிச் சொல்ல முடியாத நிலையில் எலும்புக்கூடு களாக, மண்ணின் ஆழத்துள்ளும், மலக்குழி களுக்குள்ளும் கிணறுகளின் அடியிலும் இன்னும் எங்கெங்கோ எல்லாம் உறங்கும் எங்கள் உறவு கள் சொல்லமுடியாது போய்விட்ட வதையின் கதைகள் ஏராளம். முற்றுமுழுதாக இராணுவத் தால் மட்டுமே சூழப்பட்டு ஆக்கிரமிப்பு பிரதே சமாக இருந்த கிளிநொச்சி மண்ணும் இத் தகைய கொடுமைகளை அனுபவித்த நூற்றுக் கணக்கான மனிதர்களின் உணர்வுகள் சுமந்து மௌனமாகக் கிடக்கிறது. இப்பகுதிகளில் மக்கள் குடியேறுவதற்கான சுமுகநிலை ஏற் பட்டதும் கிளிநொச்சிப் புதைகுழியிலிருந்து இன் னும் பல எலும்புக்கூடுகள் வெளிவரப்போகின் றன. அப்போது சர்வதேசத்தின் கண்களை மறைத்து தமிழர் மீது சிங்களம் புரிந்த கோரத் தாண்டவம் உலகின் முன் அம்பலமாகத்தான் போகின்றது. அதுவரையும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கைகட்டிப் பார்த்திராது சிங்களம் புரிந்துவரும் இப்படுகொலை நடவடிக் கைகள் தொடர்பாக உறுதியான நடவடிக்கை களை எடுக்க வேண்டும் என்பதே இன்னமும், சிங்களத்தின் படுகொலைக் குறியிலக்குக்கு உட் பட்டிருக்கும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

O



**கிளிநொச்சிப் படுகொலைகள்: மலக்குழி ஒன்றினுள் மனிதக் கூடுகள்**

| இல. | பெயர் | வயது |
|---|---|---|
| 143 | கமலம் முத்துமேரி | 73 |
| 144 | திருநாவுக்கரசு பரமேஸ்வரன் | 39 |
| 145 | செல்வராஜா மகேந்திரன் | — |
| 146 | மாரிமுத்து சதாசிவம் | — |
| 147 | காளிமுத்து புஸ்பராஜா | 16 |
| 148 | ஜெயராஜ் சிவலிங்கம் | 31 |
| 149 | மாசிலாமணி கணேஸ் | 37 |
| 150 | இராசலிங்கம் சண்முகதாஸ் | — |
| 151 | கறுப்பையா தம்பிராஜா | 51 |
| 152 | நாடர் சுப்பிரமணியம் | 48 |
| 153 | இளையதம்பி விநாயகமூர்த்தி | 32 |
| 154 | தங்கவேலாயுதம் சிறிஜெயலிங்கம் | — |
| 155 | செல்லையா நற்குணம் | 35 |
| 156 | மாணிக்கம் லோகேஸ்வரன் | 25 |
| 157 | வேலுப்பிள்ளை சுப்பையா | 55 |
| 158 | வைத்திலிங்கம் திருச்செல்வம் | 43 |
| 159 | அப்பாத்துரை செல்வகுமார் | 30 |
| 160 | சின்னத்தம்பி சூரிய ஜெயபாவு | 27 |
| 161 | கனகரத்தினம் சவுந்தர்ராஜா | — |

| இல. | பெயர் | வயது |
|---|---|---|
| 162 | வீரபத்திரன் சிவமோகன் | 18 |
| 163 | குப்புசாமி சாந்தகுமார் | 28 |
| 164 | அல்பிரட் றொபேட்கெனடி | 29 |
| 165 | இராசையா கனகரத்தினம் | 35 |
| 166 | வரதராஜா ஜோகேஸ்வரன் | 17 |
| 167 | அழகன் தியாகராஜா | 27 |
| 168 | இராஜரத்தினம் கலாஜோகன் | — |
| 169 | வைரமுத்து பாலேஸ்வரன் | — |
| 170 | சுப்பிரமணியம் முருகேசு | — |
| 171 | சந்திரசேகரம் சந்திரேஸ்வரன் | 16 |
| 172 | ஐபாத்துரை ஜெகதீஸ்வரன் | 21 |
| 173 | மகாநிரஞ்சினி இரத்தின சிங்கம் | — |
| 174 | சின்னையா லவன்குமார் | 25 |
| 175 | சுப்பிரமணியம் நடேசலிங்கம் | — |
| 176 | நாகரத்தினம் நித்தியானந்தன் | 23 |
| 177 | நடராசா விஜயகுமார் | 20 |
| 178 | கணபதிப்பிள்ளை சுபாஸ்குமார் | 27 |
| 179 | சிவசாமி அன்ரனி பிறேமச்சந்திரன் | 26 |

| இல. | பெயர் | வயது |
|---|---|---|
| 180 | நவரட்ணராஜா செல்வகுமார் | 21 |
| 181 | ஆரோக்கியம் ராஜப்பன் | 35 |
| 182 | வைரவி மாணிக்கம் | 80 |
| 183 | பாலராஜா நாகேஸ்வரன் | 40 |
| 184 | குமார் புலேந்திரராஜா | 34 |

பதிவு செய்யப்பட்டவர்களுள் இராணுவத்தால் கொலைசெய்யப்பட்டதாக ஏற்கனவே உறு திப்படுத்தப்பட்டவர்களின் விபரம்.

| | | |
|---|---|---|
| 01 | கனகலிங்கம் துரைச்செல்வம் | 36 |
| 02 | ஆண்டியப்பன் மலையாண்டி | 46 |
| 03 | வண.இனாசி அருள்பாலன் | 42 |
| 04 | பிரான்சிஸ் மிராண்ட ஜோசப் | 57 |
| 05 | ஜோசப் சுரேந்திரன் | 17 |
| 06 | முத்தையா கிருஸ்ணமூர்த்தி | — |
| 07 | சிவகுரு சண்முகசுந்தரம் | 42 |
| 08 | குப்புசாமி சந்திரகுமார் | 28 |



www.eelamview.com

# வன்னிச்சமர் மூன்றாம் ஆண்டின் முதல்நாள் மூக்குடைப்பு

**வ**ன்னிச்சமர்க்களம் தன் இரண்டாண்டைப் பூர்த்திசெய்து மூன்றாம் ஆண்டில் நுழைந்த முதல் நாளில் சிங்கள இராணுவம் ரணகோஷ - 3 என முன்னேறி தனது மூக்கை உடைத்துக்கொண்டது.

''ஸ்ரீலங்கா இராணுவம் யுத்தத்திற்கான தந்திரோபாய நோக்கத்தை இழந்து அரசியற் தேவைக்காகச் செயற்படுகிறது'' என கொழும்பு இராணுவவிமர்சகர் ஒருவர் சிங்கள இராணுவத்தின் செயற்பாட்டைக் கண்டனத்திற்குள்ளாக்கியுள்ளார்.

ஜயசிக்குறுய் எதிர்ச்சமரில் புலிகளின் பாதுகாப்புப் போர்முறைத் தந்திரங்களும் (Defensive Operational Tactics) அதன் வலுவும், அதனாலேற்பட்ட விளைவுகளும் சிங்கள இராணுவம் பட்டுணர்ந்தவையே. ஓயாத அலைகள் - 2 இன்மூலம் புலிகளின் தாக்கியழிப்புப் போர்முறைத் தந்திரத்தால் (Offensive operational Tactics) அதன் வலுவால் இராணுவம் சந்தித்த இழப்புக்கள் சிங்கள இராணுவத்திற்கு அதிர்ச்சியூட்டியது. இவ்வாறு தாக்கியழிப்பு, பாதுகாப்பு போர்முறையில் புலிகள் கொண்டுள்ள பலமும், அதனாலேற்படுத்திய விளைவுகளும் இராணுவத்தை தன் சமருக்கான தந்திரோபாய நோக்கிலிருந்து சிதறிச் செயற்பட வைத்தன.

யுத்தத்தின் வெற்றிச் செய்திகள் மூலம் இனவாத அரசியல் நடத்தி வந்த சந்திரிகா அரசாங்கம் வன்னிச் சமர்கண்ட தொடர் தோல்விகளால் அரசியல் நடத்துவதற்கான அடிப்படைச் சக்தியை இழந்தது. எனவே போரில் மாற்றுத் திட்டங்கள் சந்திரிகாவின் அரசியலிற்கு அவசியமாயிற்று.

'புலிகளின் முன்னணிப்பாதுகாப்பு நிலைகள் (Forward Defence Line) அற்ற பிரதேசங்களை இழப்புக்களின்றி ஆக்கிரமிப்பதன் மூலம் இராணுவத்தினரையும், சிங்கள மக்களையும் வெற்றி மனநிலையில் வைத்திருந்து அரசியல் நடத்த முடிவதுடன் ஆக்கிரமிப்பு எல்லையை அகட்டியும் கொள்ளலாம். இதன் மூலம் புலிகளின் தளப் பிரதேசத்தைப் படிப்படியாகச் சுருக்குவது எனும் இராணுவ அரசியல் நோக்கின் அடிப்படையில் அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. 'ரணகோஷ -3' புலிகளின் தளப்பிரதேசத்தை சுருக்குவது, வெற்றி மனநிலையை தமது தரப்பிற்கு உருவாக்குவது எனும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு இராணுவ நடவடிக்கையாகும்.

புலிகள் எதிர்ச்சமருக்கான தந்திரோபாயத் தேவையின் அடிப்படையில் இராணுவ நகர்வுகளுக்கேற்ப எதிர் முடிவுகளை களத்தில் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். பாதுகாப்புப்போர்முறையில் மிக நீண்ட பிரதேசத்தில் புலிகளால் முன்னணிப் பாதுகாப்பு நிலைகளில் வலுவுடன் நிற்கமுடியாது என்ற தவறான கருதுகோளின் அடிப்படையிலேயே மே 14ம் திகதி சிராட்டிக்குளம் பகுதியில் ரணகோஷ-3 என்ற பெயரில் பெரியமடுவை ஆக்கிரமிப்பதற்கான இராணுவ நடவடிக்கை நிச்சயிக்கப்பட்ட வெற்றியென்ற நம்பிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், நடவடிக்கையடைந்த எதிர்பாராத படுதோல்வியால் அரசு அதை அடக்கி வாசித்தது. பின்னர் அடங்கிப்போகவேண்டிய நிர்ப்பந்தம் உருவானது.

பெரியமடுவை ஆக்கிரமிப்பதற்கான 'ரணகோஷ -3' இரு முனை நடவடிக்கைகளைக் கொண்டது. அதன் பிரதான முனை, இரணைவிலுப்பங்குளத்தைத் தளமாகக் கொண்டு சிராட்டிக்குளம் பகுதியூடாக முன்னேறும் படை, நட்டாங்கண்டலிலிருந்து கள்ளியடிக்குச் செல்லும் பாதையைக் கைப்பற்றுவதாகும். இரண்டாவது முனை, பாலம்பிட்டியில் இருந்து முன்னேறி பெரியமடுவுக்குள் நேரடியாகப் படையை இறக்கி ஆக்கிரமிப்பதாகும்.



சிராட்டிக்குளத்திலிருந்து முன்னேறி கள்ளியடிப்பாதையைப் பிடிக்கும் பிரதான முனைக்கு ஸ்ரீலங்கா இராணுவத்தின் முன்னணிப்படையான 53 - வது டிவிசனின் சிறப்புப் பிரிவாகிய 'எயார் மொபைல் பிரிகேட்' (Air mobile Berigade) நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டது. காட்டுப்போர்முறையில் அதிவிசேட அணியாகக் கருதப்படும் இந்தப் படைப்பிரிவுக்கு, உதவிப்படையாக முன்னணிப்படையாகிய 55 வது டிவிசனும் பயன்படுத்தப்பட்டது.

**- கு. கவியழகன் -**

இதில் முன்னேறும் இராணுவத்தின் இலக்கு, சிராட்டிக்குளம் பகுதியிலிருக்கும் எமது முன்னணிப்பாதுகாப்பு நிலைகளைப் பிளந்து, தன் பின்தளத்துடனான விநியோகத்தை உறுதி செய்துகொண்டு, கள்ளியடி நோக்கிச் செல்லும் பாதையைப் பிடித்து தன் கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதாகும். இவ்வாறு, பாதை இராணுவத்தின் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டால், பெரியமடுவிலிருக்கும் புலிகளின் அணிகளுக்கு விநியோகம் செய்வதற்கான பாதை தடைப்படும். எனவே பாலம்பிட்டியிலிருந்து டாங்கிப்படையுடன் முன்னேறி பெரியமடுவுக்குள் நுழையும் இராணுவத்துடன், பெரியமடுவிலிருக்கும் புலி அணிகள், உதவிகளோ, விநியோகங்களோ கிடைக்க முடியாததால் உறுதியான பாதுகாப்புச் சண்டையை செய்யமுடியாத நெருக்கடிச் சூழல் தோன்றும். ஆகவே சிராட்டிக்குளத்திலிருந்து பெரியமடுவரைக்கும் புலி அணிகள் பின்வாங்க வேண்டிய நெருக்கடி ஏற்படும். பெரியமடு உள்ளிட்ட பெரும் பகுதியை இதன்மூலம் ஆக்கிரமித்துக் கொள்ளலாம் என இராணுவம் தப்புக்கணக்குப் போட்டுக்கொண்டதை பின்னர் புலிகள் இராணுவத்தினருக்கு உணர்த்தினர்.

யுத்தத்தில் எதிரியை அறிவதில் தான் வெற்றி தங்கியிருக்கிறது. விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஸ்ரீலங்கா இராணுவத்துடனான 25 வருடகால போர் அனுபவத்தில் இராணுவத்தின் கணிப்புகளை நன்கு அறிந்தவர். இவ்வாறான எதிரியின் முன்னேற்றங்களும், அதற்கான முறியடிப்புக்களும் ஏற்கனவே தலைவரால் அறிவுறுத்தப்பட்டு, திட்டமிடப்பட்டிருந்தது.

இரணைவிலுப்பங்குளத்திலிருந்து சிராட்டிக்குளமூடாக காலை7.20க்கு முன்னேறி வந்த 'எயார் மொபைல் பிரிகேட்' சிராட்டிக்குளம் காட்டுப் பகுதியில் உடனடியாக மினிமுகாம் ஒன்றை அமைத்துப் பின்தள தொடர்பை உறுதிப்படுத்திக் கொண்டு கள்ளியடி செல்லும் வீதியைப் பிடிப்பதற்கான அடுத்த நகர்வுக்காக முனைந்தபோது புலிகள் தம் முறியடிப்புத் தாக்குதலை தொடங்கினர். முன்னேறிய இராணுவத்திற்கும், அதன் பின்தளத்திற்குமான தொடர்பைப் பிளந்த புலி அணிகள் கிட்டு பீரங்கிப்படையின் சூட்டாதரவுடன் மினிமுகாமமைத்த இராணுவத்தை தாக்கும் முயற்சியில் இறங்கின. இராணுவத்தின் இழப்புக்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து, முன்னேறிய எயார் மொபைல் பிரிகேட், 55வது டிவிசனிடம் உதவியை நாடியது. உதவிக்கு வந்த படையை தடுத்து நிறுத்தி முறியடித்து பின்வாங்கச் செய்தனர் புலிகள்.

புலிகளின் விநியோகத்தைத் தடுக்க வந்த எயார் மொபைல் பிரிகேட்டை அதன் பின்தளத்தொடர்பு விநியோகத்தை அறுத்துத் தாக்கினர் புலிகள். இத்தாக்குதலால் 39 இராணுவத்தினர் கொல்லப்பட, 145 பேர் காயமடைந்தனர். தொடர்ந்து நடக்கவிருக்கும் நிலமையை உணர்ந்து, பி.ப.2.15 மணியளவில் புலிகளை பின்வாங்க வைக்க முன்னேறிய அணி தானே பின்வாங்கி ஓடியது.

இதே நேரத்தில், பாலம்பிட்டியிலிருந்து டாங்கிகள் சகிதம் பெரியமடு நோக்கி முன்னேறிக்கொண்டிருந்த இராணுவம் (இடைத்தூரம் 13 கி. மீ.) பிரதான முனை தோற்கடிக்கப்பட்டு பின்வாங்கிய செய்தியை அறிந்ததும் முன்னேற்றத்தைக் கைவிட்டு தளத்திற்குப் பின்வாங்கிச் சென்றது. பிரதான களமுனையில்

(09ஆம் பக்கம் பார்க்க)



www.eelamview.com

www.eelamview.com



( 03ஆம் பக்கத் தொடர்ச்சி )

## இலங்கைத்...

நடத்த வந்த முப்படைத் தளபதிகளும் கொழும்பு திரும்பினர்.

இதன் பின் பள்ளமடு என்ற மறுசமர் முனையை கைப்பற்றுவதற்கான நடவடிக்கையில் படைத்தரப்பு அவசரமாக ஈடுபட்டது. கடந்த காலத்தில்புலிகளுடனான அனுபவத்தைக் கொண்டு வெட்டைப் பிரதேசமான அப்புவியியல் சாதக தன்மையை பயன்படுத்தி, பெரியளவில் டாங்கிகளையும், பீரங்கிகளையும் பயன்படுத்துவதன் மூலம் இலக்கை வென்றுவிட முடியும் என படைத்தரப்பு நம்பியது. அதற்கேற்ப திட்டம் வகுக்கப்பட்டது.

காட்டுப்பிரதேச நடவடிக்கைக்கான அதிரடிப்படையும் (Jungle Commondos) இதனுடனான 53வது டிவிசனும், சன்னார்குளப் பகுதியூடாக பெரியமடு - பள்ளமடு பாதையை சென்றடைந்து, புலிகளுக்கு கிடைக்கக்கூடிய உதவியணிகளைத் தடுத்து நிறுத்தும் அதே வேளை, பள்ளமடு நோக்கி மன்னார்-பூநகரி பிரதான வழியே கவசத் துருப்பு படையினரை (Armourd Corbs) உள்ளடக்கிய 55வது டிவிசன் டாங்கிகளுடன் முன்னேறி பள்ளமடுவைக் கைப்பற்றும். பின் இவை தமக்குள் இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளும். இதுவே நடவடிக்கையின் அடிப்படைத் திட்டமாக இருந்தது.

26ம் திகதி 'ரணகோஷ - 4 கட்டம் இரண்டு' என்ற பெயரோடு நடவடிக்கை ஆரம்பித்தது. இராணுவம் வன்னிச்சமர்க்களத்தில் பயன்படுத்தியிருந்த அனைத்து டாங்கிகளையும் ஒன்றுகுவித்து இந்நடவடிக்கையில் ஈடுபடுத்தியது. பிரதான வீதிவழியான நகர்விற்கு, டாங்கிகளும், ஆட்லறிகளும் பெருமளவில் ஈடுபடுத்தப்பட்டன. ஏனெனில் இப்புவிச் சூழல் வெட்டையாக இருந்ததால் மரபுப்போர் முறைக்கு உகந்ததாக இருந்தது. இதுவரை எந்த நடவடிக்கையிலும் பயன்படுத்தப்படாதளவு டாங்கிகள் இங்கே பயன்படுத்தப்பட்டன. எதிரி இவ்வாறான ஒரு நடவடிக்கையை செய்வான் என்பதை உணர்ந்தே, எமது ''விக்டர் கவச எதிர்ப்பு படைப்பிரிவு'' மேலதிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

ஆட்லறியால் ஏற்படுத்திய சூட்டுத்தடுப்பை காப்பாகக் கொண்டு டாங்கிகள் வேகமாக முன்னேறின. விக்டர் கசவ எதிர்ப்புப் படையணிகள் எதிரியின் பீரங்கிச் சூட்டுத்தடுப்பையும் மீறி முன்னேறி எதிரி டாங்கிகளை தாக்கின. முன்னேறிக்கொண்டிருந்த டாங்கிகளில் ஏழு டாங்கிகள் சொற்ப நேரத்தில் செயலிழந்தன. கடுமையான சண்டை நடந்து கொண்டிருந்தது. எதிரி சாதகமான நிலமை என எதிர்பார்த்த களநிலை அங்கே இருக்கவில்லை. எதிர்பாராத இழப்பை இராணுவம் சந்திக்க நேர்ந்தது.

இதேநேரம் காட்டு நடவடிக்கை அதிரடிப் படையினரை உள்ளடக்கிய 53வது டிவிசன் சன்னார்குளம் வரை முன்னேறிய போதும் பள்ளமடு - பெரியமடு வீதியை சென்றடைய களநிலை இடம்கொடுக்கவில்லை. பிரதான வீதிவழியான முன்னேற்றம் இலக்கை சென்றடையாத நிலையில் பெரியமடு - பள்ளமடு வீதியை நோக்கி முன்னேறுவது அர்த்தம் அற்றதாகிவிட்டது. ஆக, நடவடிக்கையின் இலக்கு எட்டப்படவில்லை. மூன்று நாள் திட்டமிடப்பட்ட நடவடிக்கை ஒரு நாளுடன் கைவிடப்பட்டது.

மொத்தத்தில் இரண்டு டிவிசன்களைப் பயன்படுத்தி சாதகமான புவியியல் சூழல் என்ற கருதுகோளோடு, பெருமளவில் டாங்கிகள் ஆட்லறிகளை உள்ளடக்கிப் பெரும் பலப் பிரயோகத்தைச் செய்த இந்நடவடிக்கை அதிக விலையைக் கொடுத்து இலக்கை எட்டமுடியாத நடவடிக்கையாக முடக்கப்பட்டது. இந்நடவடிக்கையில் அதிகாரிகள் உட்பட 150 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 350 பேர்வரையில் காயமடைந்ததாகவும் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

மன்னார் - பூநகரி பாதை திறப்பதற்கான அடிப்படை இலக்கு நோக்கிய இந் நகர்வை தடுத்து நிறுத்தும் இச்சமரில் 84 புலிகள் தமது உயிர்களை தியாகம் செய்து இதைச் சாதித்தனர். மன்னார் - பூநகரி பாதை திறப்பதற்கான முதல்கட்ட இலக்குகள் முதன் முறை நகர்வின்போதே நிச்சயமான தோல்விகளை சந்தித்துக் கொண்டன.

இந்நிலையில் வருகின்ற வருடத்தின் ஆரம்பத்தில் நடத்தியே ஆகவேண்டிய பாராளுமன்ற, ஜனாதிபதி தேர்தல்களிற்கிடையில் இவ் இலக்கு எட்டப்பட்டாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அரசிற்கு உள்ளது. இந்த மிகக்குறுகிய காலத்தில் இலக்கு எட்டப்படுமா? என்ற கேள்வியைவிட, இன்னும் மூன்று மாதத்தில் வன்னியில் மழைகாலம் தொடங்கிவிட்டால் முன்னேறுவதற்கான எந்த வாய்ப்பும் இல்லை. எனவே மூன்று மாதத்தினுள் இலக்கு எட்டப்பட வேண்டும் என்பது இராணுவத்தை சங்கடத்திற்குள்ளாக்கியுள்ள நிலையில் அதன் முதலிரு பிரதான நடவடிக்கைகளும் படு தோல்வியை தழுவியுள்ளன.

ஆயினும் தமிழர் மீதான இராணுவ மேலாதிக்கத்தைக் காட்டி சிங்கள தேசத்தில் அரசியல் நடாத்தும் சந்திரிகா அரசு, தேர்தல் வெற்றிக்காக இப்பாதை பிடிப்பு நடவடிக்கையை இலகுவில் கைவிடப்போவதில்லை. இது வெளிப்படையான உண்மையே. கண்டி வீதிபிடிக்க புறப்பட்ட ''வெற்றி நிச்சயம்'' நடவடிக்கையை நிச்சயிக்கப்பட்ட தோல்வியாக்கிய புலிகள், ''யுத்த முழக்கம்'' நடவடிக்கையை தம் வெற்றி முழக்கமாக மாற்றும் செயலில் இறங்கியுள்ளனர். O



''வெற்றி நிச்சயம்'' நடவடிக்கையை நிச்சயிக்கப்பட்ட தோல்வியாக்கிய புலிகள், ''யுத்த முழக்கம்'' நடவடிக்கையை தம் வெற்றி முழக்கமாக மாற்றும் செயலில் இறங்கியுள்ளனர்.

( 04 ஆம்பக்கத்தொடர்ச்சி )

## வாழ்வு...

தனியொருவனாய் சஜந்தன் நிலைமையை மாற்றியமைத்தான்.

அந்தத் தடையை அகற்ற வேண்டிய தேவையை அவன் உணர்ந்ததால், அன்றைய சண்டையின் முடிவு கண்களில் பட அவன் அவ்வாறு முடிவெடுத்தான். ஓடிச்சென்று முட்கம்பிச் சுருளின் மீது பாய்ந்தான், நசுங்கிய கம்பியின் மேல் அவன் கிடக்க, அவன் அமைத்துத் தந்த அந்த உயிர்த் துடிப்பான அந்தப் பாதையின் வழியாக இலக்கை நோக்கி நகர்ந்தனர் தோழர்கள்.

அவனது அணி தனக்குக் கொடுக்கப்பட்ட எதிரிப் பகுதியை பிடித்துக் கொண்டு முன்னேறியது. எதிரியின் சூட்டில் விழவேண்டியவர்களாய் இருந்த நிலைமாறி அவனது தோழர்கள் எதிரியை வீழ்த்திக் கொண்டு முன்னேறினர். தாக்குதலின் முடிவில் நூற்றுக்கணக்கான எதிரிகளை நாம் வீழ்த்தியிருந்தோம். எதிரியின் பீரங்கிகளை அழித்திருந்தோம். அந்த வெற்றிக்கு வழிசமைப்பதற்காக தன் உடலால் வழிசமைத்தவன் எங்கள் சஜந்தன். உடலின் ஒவ்வொரு உயிர் அணுக்களும் வேதனையால் துடிக்க, அத்தனை வேதனை உணர்ச்சிகளையும் தாங்கி எதிரியின் முட்கம்பித் தடையின் மீது பாய்ந்து தோழர்களுக்கு வழிசமைத்தவனின் வீரம் அத்தனையும் அன்றைய சண்டையின் வெற்றிக்காய், அந்த வெற்றியால் தீர்மானிக்கப்படும் அவன் நேசித்த மக்களின் வாழ்விற்காய்.

''எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கின்றது'' என்ற தலைவர் அவர்களின் கூற்றுப்படி தனது நெஞ்சுரத்தால் அன்றைய சண்டையை மாற்றியமைத்தவன், பின் ஜயசிக்குறுய் சமரில் வித்தாகிப் போனான். இவன் போன்ற போராளிகளின் தியாகங்களே இன்றும் தொடரும் வழித்தடங்களாக எமக்கு வழிகாட்டி நிற்கின்றன. O

( 08ஆம் பக்கத் தொடர்ச்சி )

## – வன்னிச்சமர்...

தனது இலக்கு வெற்றியீட்டப்படாமல் பெரியமடுவைப் பிடிப்பதற்கான தனது முயற்சி புலிகளின் கையில் இராணுவத்தைப் பலியிடுவதாகும் என்பதை உணர்ந்த நடவடிக்கையின் கட்டளை அதிகாரி பின்வாங்குவதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்த முறியடிப்புத் தாக்குதலில் 5 இராணுவச் சடலங்கள் கைப்பற்றப்பட்டதுடன், R.P.G.A,K,L.M.G. உள்ளிட்ட இயந்திரத் துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன. இந்த முறியடிப்புச்சமரில் 07 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

இரண்டு வருடச்சமரில் தொடரிழப்புக்களால் சரிந்துவிட்ட இராணுவத்தின் மனோதிடத்தைத் தூக்கி நிமிர்த்தி நிலை நிறுத்துவது இராணுவ உயர்பீடத்திற்குச் சவாலாக மாறியது. இழப்புக்களின்றி பிரதேசங்களைக் கைப்பற்றி இராணுவத்திற்கு வெற்றி உணர்வை ஊட்டுவது எனும் திட்டத்திற்கு உச்சியில் விழுந்த அடியாக இந்த முறியடிப்புச்சமர் மாறியது. இராணுவத்தின் மனோதிடத்தைப் பேணுவதற்காக மேஜர் தர அதிகாரிகள் கூட நடவடிக்கையில் துருப்புகளுடன் முன்னணியில் பங்கு கொண்டனர். இவ்வாறிருந்தும் அடையப்பட்ட தோல்வி இராணுவத்தின் போருக்கான மனோதிடத்தை மேலும் மோசமாக்கியுள்ளது.

ஆயினும் யுத்தத்தின் வெற்றி மூலம் அரசியல் வியாபாரம் நடத்தும் அரசு மேலும் இராணுவ நடவடிக்கைகளுக்கு கட்டளையிடவே செய்யும். ஆனால் அவை புலிகளிடம் எவ்வாறான விளைவைப் பெற்றுக்கொள்ளப்போகின்றன? பொறுத்திருந்து கண்டுகொள்ளட்டும். O



www.eelamview.com

www.eelamview.com





# போராளியின் குருதிச்சுவடுகள்

கரும்புலி மேஜர் குமுதன்.

அந்த நிகழ்வுகளில் இருந்து குமுதனின் நினைவுகளை பிரிக்க முடியாததாய் இருந்தது.. இப்போதெல்லாம் அவனது சுவாசம் அந்த நினைவுகளைத் தழுவியதாகவே வந்து போனது. அதே நினைவுகள் தான் குமுதனின் கண்களை யும் நெஞ்சையும் நினைத்துக் கொண்டிருந்தன.

வெட்டையும் திட்டுத்திட்டாக வளர்ந்தி ருக்கும் சிறு பற்றைகளும் நிறைந்து பரந்து விரிந்த அந்தப் பிரதேசத்தின் நெஞ்சைக் கிழிப் பதைப்போல கிளிநொச்சி நகரினை நோக்கி இராணுவம் முன்னேறிக்கொண்டிருந்தது.

பெரிய இராணுவ நகர்வை எதிர்த்து நேருக்குநேர் சமரிட்டுக் கொண்டிருந்த எமது தாக்குதல் அணியின் ஒரு பிளட்டூன் அணித் தலைவனாக குமுதனும் நின்று சமரிட்டுக் கொண்டிருந்தான்.

ஒவ்வொரு அங்குல நிலத்தையும் இரா ணுவ பாதங்கள் மிதிக்கின்றபோதும் அவனிற் குள்ளேயே எரிந்த ஆவேச நெருப்பால் கண் ணிலும் குரலிலும் இடையிடையே பொறி பறந்தது.

மரஞ்செடிகளைப் போல உருமாற் றம் செய்து நகர்ந்துகொண்டிருந்த கவசவாகனங்கள் சிறுபற்றைகளை நெரித்து பெரிய புகைமண்டலங்களை உருவாக்கியபடி காவலரணிற்கு மிக அண்மையாக வந்துநின்றது. ''அங் காலப் பக்கத்தால் டாங்கிகள் வந்து முட்டிட்டானாம். நீங்கள் அங்க போய் அதை மறியுங்கோ, கவனம் மறைப்பெடுத்துப்போங்கோ.''

குமுதன் சொல்லி முடிக்கின்ற போது அவனது கட்டளைக்காகவே காத்திருந்த இரண்டு டாங்கி எதிர்ப்பு வீரர்களின் கண்களிலும் வேகம் பிறப் பெடுத்தது. சண்டை எல்லா இடங் களிலும் பெரும் முழக்கமிட்டு தொடர்ந்து கொண்டிருந்தது.

இரண்டு கவச எதிர்ப்புப் போராளிகளும் அந்த டாங்கிகளை தடுத்து நிறுத்துவதற்காக போராடிக் கொண்டிருந்தார்கள்.

ஆனாலும் எதிரியின் சூட்டு வலு வினால் அந்தப் பிரதேசம் முழுவதும் வலைகளாக ரவைகள் பொழியப் பட்டுக்கொண்டிருந்தது. அந்த வலைப்பின்னலிற்குள்ளேயே இரண்டு கவச எதிர்ப்புப் போராளிகளும் சிக்கிக்கொண்டனர்.

குமுதன் இறுதியாகப் பார்த்து விடைகொடுத்தனுப்பிய இரண்டு இளைய வீரர்களுமே வித்துடல்க ளைக்கூட பார்க்கமுடியாதளவு உடல் சிதைந்துபோய் இருந்தார்கள்.

அந்த நிகழ்வைக் கண்டபின்னர் குமுதனதுகண்கள் அதையே சொந்த மாகக் கொண்டன. கண்களால் கண்டு பதிந்துகொண்ட அந்த நிகழ் வுகளை எண்ணுகின்ற போதெல்லாம் நெஞ்சு பெரிதாக வலிக்கிறது.

மற்றவனின் துன்பத்தைக்கண்டு தாங்கிக்கொள்ளமுடியாத அவனிற்கு அவனது நெஞ்சில் ஆழமாக பதிந்த நிகழ்வுகள் ஆறாத தழும்புகளாய் இருந்தன.



## கரும்புலி மேஜர் குமுதன்

பெயர் : மயில்வாகனம் - இன்பராஜ்

முகவரி : யாழ்ப்பாணம்

கரும்புலியாகுமுன்: ஆகாய கடல்வெளிப் பெருஞ்சமர், மின்னல் இரா ணுவ நடவடிக்கை முறியடிப்புத் தாக்குதல், ஓயாத அலைகள் 01 இல் அலம் பில் பகுதியில் தரையிறங்கிய விசேட அதி ரடிப் படையினர் மீதான தாக்குதல், சத் ஜய 1,2 போன்ற இராணுவ நடவடிக்கை களிற்கு எதிர் நடவடிக்கையிலும்.

கரும்புலியாகிய பின் : தாண்டிக்குள இராணு வத்தளம் மீதான தாக்குதல், மணலாளன் பட்ட முறிப்பில் உலங்குவானூர்தி மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதல்.

இவர்பெற்ற சிறப்புப் பயிற்சிகள் : 50 கலிபர் கனரக ஆயுதப் பயிற்சி, 203 பயிற்சி மெய்ப்பாது காவலர் பயிற்சி, கரும்புலி அணிக்குரிய சிறப்புப் பயிற்சி.

# உளப்பலத்தால் உழைத்தவன்

இதே தாக்குதல் அணியுடன் சற்று நாட் களுக்கு முன் அலம்பில் பகுதியில் தரையிறங் கிய சிறப்புப்படையினரை எதிர்த்துச் சண்டை யிட்டு இராணுவம் நினைத்து வந்த இலக்கை எட்டவிடாது தடுத்ததில் பங்கெடுத்தவன் குமுதன்.

தாக்குதல் அணியின் பிளட்டூன் உதவி அணித்தலைவராக நின்றாலும் சண்டை உக் கிரம் அடைந்து சென்றபோது ஒரு பகுதி முழுவ தற்குமான கட்டளைகளை அவனே வழங்க வேண்டியிருந்தது.

அதிகப்பேர் விழுப்புண்பட்டு வீரச்சாவ டைந்து போனமையாலும் அணியின் ஆட் தொகையில் பெரும் சரிவு ஏற்பட்டிருந்தது. அந்த இறுக்கம் நிறைந்த சூழலிலும் இருக்கும் உறுப்பினர்களை ஒழுங்குபடுத்தி எதிரி முன்

**- துளசிச்செல்வன் -**

னேறாதவாறு மறிப்புப் போட்டு விட்டு காயக்காரரையும் வீரச்சாவடைந்தோரையும் பின்னுக்கு அனுப்பினான்.

இதுவரைக்கும் தன் தோள்பட்டையில், பாய்ந்திருக்கும் குண்டைப்பற்றியோ அல்லது அவனின் மேல்சட்டையையும் மீறிப் பாய்கின்ற குருதியைப் பற்றியோ கவனிக்கவில்லை. அவ னது சிந்தனையும் செயல்களும் இராணுவத் தின் நோக்கத்தை எப்படியும் முறியடித்துவிட வேண்டுமே என்று துடித்துக்கொண்டிருந்தன.

அதுபோன்றதொரு துடிப்பு நெஞ்சில் கனன்றுகொண்டிருக்கவே சத்ஜய எதிர்ச்சமர்க் களத்திலும் அவன் சுழன்றுகொண்டிருந்தான். ''அண்ணை எங்களிற்கு கிட்டவா டாங்கி வந்திட்டுது'' குமுதனுக்கு பக்கவாட்டாக இருந்த காவலரணில் இருந்தவன் நிலமையை குமுதனிற்குத் தெரியப்படுத்தினான்.

அந்தப் பெருஞ்சமர் ஓய்ந்தபோதும் குமு தனின் மனம் ஓயவில்லை. தனியொரு நெஞ் சிற்குள் மட்டும் எத்தனையோ சமர் அரங் குகள் திறக்கப்பட்டன.

முடிவிலாது குமுறிக்கொண்டிருந்த குமுத னின் கண்களில் புதியதான வடிவம் ஒன்றின் வாசல் முளைவிட்டது. குமுதன் தனக்குள் ளேயே எரிந்துகொண்டிருக்கும் பெரிய இலட்சிய நெருப்போடுதான் ''கரும்புலிகள்'' அணியிற் குள் தன்னை இணைத்துக் கொண்டான்.

அங்கு அவனை எதிர்கொள்ளவிருந்த சவால்களோ ஏராளம்.

''இனியென்னன்று குமுதன் அந்தக் காரி யத்தைச் செய்து முடிக்கப்போகிறான். சாதா ரண மனித வலுவுடையவர்களே செய்ய சிர மப்படும் அந்த கரும்புலிகள் அணிப்பயிற்சியை குமுதன் செய்து முடிப்பானா?''

ஆச்சரியத்தால் உயர்ந்த புருவங்களை உயர வைத்தபடியே அதிசயிக்க வைத்தான்.

ஒருபோராளி தன்னைக் கரும்புலி அணி யில் சேர்த்துக்கொள்ளப்போகிறான் என்றால் அவனைப் பற்றிய அடிப்படையான சில தகு திகளைப் பரிசோதிப்பதுண்டு. அதுபோலவே குமுதனும் தன்னைக் கரும்புலிகள் அணியில் சேர்த்துக்கொண்டபோது அவனைப்பற்றிய தகுதிகளும் பார்க்கப்பட்டது.

ஒருபோராளி கரும்புலிகள் அணியில் தன்னை இணைத்துக்கொள்ள வேண்டுமாயின் அவர் இரண்டு வருடங்கள் இயக்கம் வழங்கிய பணிகளைச் சரிவரச் செய்து முடித்திருக்க வேண் டும்.

குமுதனைப் பொறுத்தவரை ஐந்து வருடங் களுக்கு மேலாக இயக்கம் வழங்கிய கடமை களை இயக்கம் எதிர்பார்த்ததுபோல செய்து முடித்தவன். எனவே அதில் அவனிற்கு தடை யிருக்கவில்லை.

குறிக்கப்பட்ட நேரத்திற்குள் குறித்த சில பயிற்சிகளை செய்துமுடிக்கும் உடற்தகுதி பெற் றவரா என்ற கேள்விக்கும் அவன் இதுவரை பெற்ற பயிற்சிகள் விடைபகர்ந்தன. குமுதன் இயக்கத்திற்கு வந்ததில் இருந்து எந்தப்பயிற் சியிலும் விட்டுக்கொடுத்ததில்லை. எப்படியான பயிற்சி என்றாலும் செய்துமுடிக்கக்கூடியவன். இதுவரை 50 கலிபர் பயிற்சி, சிறப்பு அதிரடிப் படைப் பயிற்சி போன்றன பெற்றிருக்கிறான். எனவே அதிலும் சிக்கல் இருக்கவில்லை. ஆனால் அடுத்துவந்த மருத்துவ பரிசோதனை தான் நிறையப்பேரிற்கு அதிர்ச்சி தருவதாக இருந் தது. இதுவரையும் தனக்குள்ளேயே மறைத்து வைத்திருந்த நோய் அப்போதுதான் வெளித் தெரிய வந்தது. ஆனால் இதுவரை எந்த சந்தர்ப்பத்திலும் அவன் தன் நோயினை வெளிக்காட்டியதே இல்லை.

குமுதனிற்குள் இருக்கும் இதய நோயையும் தொய்வுநோயையும் மருத்துவப் பரிசோதனை மூலம் அறிந்துகொண்டபோது, அவனைக் கரும்புலிகள் அணியில் சேர்த்துக்கொள்வதற் கான அனுமதி மறுக்கப்பட்டது.

குமுதனோ விடுகிறபாடில்லை. ஓரேபிடி யாகத் தன்னைக் கரும்புலிகள் அணியில் இணைத்துக்கொள்ளுமாறு வேண்டினான். ''அண்ணை தேர்வுப் பயிற்சி வரைக்கும் என் டாலும் விடுங்கோ, நான் அதில என்னால முடியுமென்று நிரூபிச்சுக்காட்டுறன்'' என்று கெஞ்சலான குரலில் உறுதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அவனது இலட்சிய தாகம் முழுவதையும் தனது குரலிலே பரவவிட்டான்.

அவனின் உறுதிகுலையாத தன்மை வீணாக வில்லை. தேர்வுப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்

( 11ஆம் பக்கம் பார்க்க )





www.eelamview.com

www.eelamview.com

( 10ஆம் பக்கத் தொடர்ச்சி )

## உளப்பலத்தால்...

டது. அதில் குமுதனும் ஒருவனாக இருந்தான்.

தேர்வுப்பயிற்சி நிறைவுறும்போது அனைத்துப் பயிற்சிகளிலும் சித்தி பெற்று தனது இலட்சியத்திற்கு நோய் இடையூறு இல்லை என நிரூபித்தான்.

இப்படி தேசத்திற்காகத் தான் வரித்துக் கொண்ட கொள்கையில் உறுதியான குமுதன் தான் இப்போ ஆனையிறவுப்பெருந்தளத்தினுள் நுழைந்த கரும்புலிகள் அணியிற்கு தலைமைதாங்கி இலக்கை நெருங்கிக்கொண்டிருந்தான். இன்னும் சில வினாடிகளைக் காலம் வேகமாக விழுங்கிக்கொள்ளுமாயின் அங்கே இருளாய், அமைதியாய் நிலைத்திருக்கும் சூழ்நிலை மாறி புதிய சமர்க்களம் உருவாகும்.

அந்த ஒரிரு கண நேரத்திற்காகவே காலமும், கரும்புலியணி வீரர்களின் கால்களும் முன்னோக்கி வேகமாக நிதானமுடன் நகர்ந்துகொண்டிருந்தன. நினைவுகள் மட்டும் பின்னோக்கி விரையத் தொடங்கின.

கரும்புலிகள் பயிற்சி முடிய தாண்டிக்குளம் சண்டைக்குச் சென்று, அங்கு விழுப்புண்பட்டமையால் தாக்குதலில் பங்குபெறாது பின்னிற்கு வந்ததும் பின் விழுப்புண் குணமடைய மணவாளன்பட்டமுறிப்புச் சண்டையிற்குச் சென்றது என்று எல்லா நிகழ்விலும் நினைவுகள் தடம் பதிக்கத் தொடங்கியது.

அதிலும் மணவாளன்பட்டமுறிப்புத்தாக்குதல் வந்ததும் நினைவுகள் அதைவிட்டு நகரவேயில்லை.

எதிரி கைப்பற்றிவைத்திருக்கும் இராணுவ பிரதேசத்துக்குள்தான் அவர்களிற்கான இலக்கு. அதுவும் அதியுயர் பாதுகாப்பு வலயம் எனக் கருதி அங்கேயே அந்த உலங்குவானூர்தி தரையிறங்கி ஏறியது. அந்த உலங்குவானூர்தியைத் தாக்கி அழிப்பதே தாக்குதல் அணியின் நோக்கமாகவிருந்தது.

கொமாண்டோப்பாணியில் சென்று இலக்கைத் தாக்குவது-அது சாத்தியப்படாவிட்டால் கரும்புலித்தாக்குதல் மூலமாவது அந்த இலக்கை அழித்துவிடவேண்டும் என்பதற்காகவே கரும்புலிவீரர்கள அந்தத் தாக்குதலுக்குத் தெரிவு செய்யப்பட்டு இருந்தார்கள்.

அதுவோ மிகவும் வித்தியாசமான இலக்கு. முன்திட்டமிடலோ மாதிரிப் பயிற்சியோ இல்லாது இலக்கைச் சென்றடைந்து அதைப்பார்த்து அங்கு நிலவும் களச்சூழலுக்கேற்ப அணித்தலைவரே முடிவெடுத்துச் செயற்படவேண்டும். அதனால் அந்தக் கரும்புலிகள் அணியிற்கு குமுதனே தலைமைதாங்கிச் சென்றிருந்தான்.

தலைவரிற்கு குமுதனின் வழிநடத்தலில் அதிக நம்பிக்கையிருந்தது. ஏனென்றால் குமுதன் மெய்ப்பாதுகாப்புப் பணியேற்று தலைவருடன் நெருங்கி நின்ற நாட்களில் எல்லாம் அவனது ஒவ்வொரு அசைவையும் தலைவர் நேரே கவனித்தார்.

அப்போது அவனிற்குள் இருக்கும் வழி நடத்தும் ஆற்றலை தலைவர் நன்கு அறிந்திருந்தார். எனவேதான் இந்தத்தாக்குதல் அணியை அவன் தலைமையிலேயே அனுப்பிவைத்திருந்தார். இலக்கினை நோக்கி கரும்புலிகள் அணி நகர ஆரம்பித்த கொஞ்ச நேரத்திற்குள் எல்லாம் வானம் பிரிந்து விட்டதைப்போல மழை வாரிப் பொழிந்துகொண்டிருந்தது.

உடையோடு சேர்ந்து நனைந்துபோயிருக்கும் உடலுக்குள்ளால் ஊசிபோல உள்நுழையும் குளிர் உடலின் ஒவ்வொரு கலத்தையும் நடுங்க வைத்தது.

தரையில் சாய்ந்துகொள்ளவோ, இருக்கவோ முடியாது. ஒரே சேறும் தண்ணீரும் நிறைந்திருந்தன. பேணிகளிலும் பைகளிலும் அடைக்கப்பட்ட உணவுகளைத் தவிர வேறொரு சூடான உணவுவகைகளும் இல்லை. இவ்வாறு சிக்கல்நிறைந்த சூழலில் தான் குமுதனிற்குள் மறைந்திருந்த அந்த நோய் வெளியே வரத் தொடங்கியது.

குமுதனால் ஒரு மூச்சைக்கூட சிரமம் இன்றி விட முடியவில்லை. ஒவ்வொரு மூச்சையும் உள் இழுத்து வெளிவிடுவதற்கு ஒரு போராட்டமே நடத்தவேண்டியிருந்தது. குந்தியிருந்தான். குனிந்து நின்றான். கைகளைத் தலைக்கு மேல் உயர்த்தினான். இப்படி ஒவ்வொரு மூச்சுக்கும் சிரமப்பட்டாலும் தனக்கு இந்த நேரம் வந்த நோய் யாருக்கும் தெரிந்துவிடக்கூடாது என்று பெரும் சிரமத்தின் மத்தியிலும் அதைத் தனக்குள்ளேயே மறைக்கமுயன்றான்.

இந்த நேரத்தில் தன்னைப்பற்றியோ தனது வருத்தத்தைப் பற்றியோ சிந்திப்பவனாக இல்லை. அவனது நெஞ்சிற்குள் கதைத்ததெல்லாம் அந்த இலக்கை எப்படியும் அழித்துவிட வேண்டும் என்பதே.

இத்தனை சிரமங்களையும் பொருட்படுத்தாது இலக்கை அழித்துவிடவேண்டும் என்பதை மட்டுமே சுமந்து அந்த இலக்கை அழித்துவிட்டு வரும்வரையும் தனது நோயினைப்பற்றி யாருடனும் கதைக்கவேயில்லை. பின் மெல்ல மெல்ல கதை தெரியவந்தபோது அவனது உறுதியும் தாயகப்பற்றும் பளிச்சென்று வெளித்தெரிந்தது.

ஆனையிறவு தளத்திற்குள் தாக்குதல் ஆரம்பிக்கும் நேரம்வரை காத்திருந்த கரும்புலிகளை அதற்கான நேரம் அண்மிக்கக் குமுதனின் கட்டளையோடு தாக்குதல் ஆரம்பமானது.

இடியும் மின்னலும் தரையில் இருந்து பிறப்பெடுப்பதைப்போல சத்தமும் தீச்சுவாலைகளும் மண்ணில் எல்லா முனைகளிலும் இருந்தும் எழுந்தது.

அமைதியும் இருளும் கருக்கலைய ஆனையிறவுப்படைத்தளத்தின் மையத்தளம் புதிய சமரரங்காய் கருவுற்றிருந்தது.

கண்ணிற்குத் தெரியும் கறுப்பு உருவங்கள் எல்லாம் தங்கள எதிரிகள் என்று இருட்டில் எல்லா இடங்களிலும் இராணுவம் சுட்டுக்கொண்டிருந்தது.

தாக்குதல் ஆரம்பித்த சில கணங்களுக்குள் கரும்புலிகள அணி அவர்களிற்கு வழங்கப்பட்ட இலக்குகளை அழித்துவிட்டு திட்டத்தின்படி பின்வாங்கிக்கொண்டிருந்தார்கள்.

இந்த வேளையில்தான் குமுதன் விழுப்புண் அடைகிறான். அவன் விழுப்புண் அடைந்தாலும் நிதானத்தை இன்னும் இழந்துவிடவில்லை. களநிலமைகளுக்கு ஏற்றதுபோல் கட்டளைகளை வழங்கிக்கொண்டிருந்தான்.

இப்போதெல்லாம் குமுதன் இன்னும் ஒரு தோழனின் கைத்தாங்கலிலேயே பின்னிற்கு நகர்ந்துகொண்டிருந்தான். சிறிது நேரத்தில் குமுதனைக் கைத்தாங்கலாகத் தூக்கி வந்த தோழனும் விழுப்புண் அடைந்துவிடுகிறான்.

குமுதனிற்குத் தெரியும் இன்னும் கொஞ்ச நேரத்தில் நினைவிழந்துவிடப்போகிறேன் என்று. இறுதியாய் கழிகின்ற ஒவ்வொருகணத்திலும் தனது சிறு அசைவைக்கூட தேசத்திற்கு பயனுள்ளதாகச் செய்துவிட வேண்டுமெனத் துடித்துக் கொண்டிருந்தான்.

இறுதியாக அவனை பிரிந்துவிடத்துடிக்கும் மூச்சுக்காற்றையும் நினைவுகளையும் தக்க வைத்தபடி அவனிற்கான ஒவ்வொரு பணியையும் செய்துமுடித்தான்.

அணிகள் அனைத்தையும் பின்வாங்குவதற்கேற்ற ஒழுங்குகளைச் செய்துவிட்டு விழுப்புண்பட்டாலும் பின்னிற்கு குமுதனையும் தூக்கிச் செல்வதற்காக நின்ற தோழனைப் பார்த்து ''மச்சான் இன்னும் கொஞ்ச நேரத்தில் நான் சாஜ்சரை இழுக்கப்போறன், நீ கட்டாயம் வெளியிலபோய், இஞ்ச நடந்ததை சொல்ல வேண்டும். எத்தின இலக்கை அழிச்சனாங்கள, இன்னும் எத்தின இலக்கு இருக்குதெண்டு சொல்லு. அது இன்னொரு சண்டைக்கு உதவும்.''

அடுத்த சில மணித்துளிகளில் தனது சாவைத் தானே தீர்மானிக்கப்போகும் அந்த வீரன் சொல்லிய சேதி இது. எப்படி அவனால் முடிந்தது. எதிரிகளின் இடைவிடாத தாக்குதலுக்கு மத்தியிலும் தன் களமாடிய தோழர்களை இழந்துவிட்ட நிலையிலும் ஏற்கனவே பலவீனமான அவனது உடல் விழுப்புண் அடைந்த வேதனையால் சோர்ந்துவிட்ட போதும் எதைப்பற்றியுமே சிந்திக்காது அந்த இறுதிக்கணத்திலும் தனது அணியைப் பற்றியும், தனக்கு வழங்கப்பட்ட கடமைகளைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருக்கும் அவன்,

இதுவரை காலமும் இயக்க வாழ்வில் ஒவ்வொரு மணித்துளியையும் எவ்வளவு பயனுடையதாக செலவு செய்திருப்பான் என்பதை எடுத்துக்காட்டியது. எவ்வளவு தூரம் எமது தாயகத்தில் பற்றுவைத்து உழைத்திருப்பான். குமுதன் கூறியனுப்பிய சேதிகளைச் சொல்லிவிடவேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகவே முகாமைவிட்டு பல சிரமங்களையும் பொருட்படுத்தாது வெளியேறிய தோழன், குமுதன் சொல்லி விட்ட சேதிகளைச் சொல்லியபோது குமுதன் காவியமாகிவிட்டான்.

அவன் சொல்லிவிட்ட சேதிகளே இன்னுமொரு தாக்குதலுக்கு பக்கபலமாக அமைந்துவிட்டது என்று எண்ணுகிறபோதெல்லாம் அந்த இளைய வீரனின் முகமே கண்களுக்குள் தெரியும்.

அவன் என்றைக்கும் வாழுகின்ற வரலாறு.

O

( 05ஆம் பக்கத் தொடர்ச்சி )

## சமரும்...

விளைவான சிறப்புத் தேர்ச்சி எம் இராணுவ மருத்துவர்களின் செயற்பாட்டில் வெளிப்பட்டது. இது எம் போரிடும் ஆற்றலின் பரிணாம வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தது. உதாரணமாக வேவுப்புலிகளுடன் இராணுவ மருத்துவர்களும் நகர ஆரம்பித்தனர். பல நாட்களாக எதிரியின் பிரதேசத்தினுள் தங்கி நின்று வேவு எடுத்தல், சிறு - சிறு அதிர்ச்சியூட்டும் பதுங்கித் தாக்குதல்களைச்செய்தல், இராணுவப் பொறுப்பதிகாரிகளைத் தேர்ந்து கொல்லுதல் போன்ற உப சமர்ச் செயற்பாடுகளின் போது பல போராளிகள காயமடைவர். இவர்களை உடனடியாக எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குக் கொண்டுவருவதென்பது முயற்கொம்பாகும். அவர்களின் உயிரைத் தக்க வைக்க வேண்டுமாயின் எதிரியின் தளங்களினுள் வைத்தே சிகிச்சைகள் மேற்கொள்ளல் வேண்டும். மேற்படி போராளிகளுக்கு வன மரங்களின் மறைவில் பாதுகாப்பின்மையிலும் பாதுகாப்பை உணர்த்துதல் வேண்டும். இப்பணிக்காக சிறு சத்திரசிகிச்சைக் கூடமொன்றையே தம் தோள்களில் சுமந்தவண்ணம் காடுகளில் திரிவர் எம் இராணுவ மருத்துவர்கள். இவ்வாறான பணியில் ஈடுபட்டிருந்த வேளை, 10.11.97 அன்று மேஜர் சந்திரன் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

சமரும் மருத்துவமும் எனக் கருத்துக்களைப் பதிக்கையில் எம் மக்களின் மகத்தான பங்களிப்பைக் குறிப்பிடல் அவசியமாகின்றது. சமர்கள் விரிவடைந்த போதெல்லாம் இவர்கள் காலமறிந்து, தேவையறிந்து செய்த உதவிகள் ஞாலமறிந்தவை. சொற்களினால் ஏற்படுத்தப்படும் விரிப்பு வரையறையைத் தாண்டியவை? பொருளாதாரத் தடை, மருந்துத் தடை, எனப்பல தடைகளின் பாதிப்பைத் தாண்டி தம் போராளிகளுக்காக இரத்ததானம் செய்தனர். மேலும் பாதுகாப்புக் காரணங்களுக்காகக் காயமடைந்தவர்களை விரைவாக இடம்மாற்ற உதவுதல், அறுசுவை உணவுகளைப் பதமறிந்து செய்து தருதல், இரகசிய பாதுகாப்பிற்கு ஒத்துழைத்தல், சொந்த பந்தங்களைத் துறந்தவர்கள விழுப்புண் வேதனையில் துடிக்கையில் தாதியாய்ப் பராமரித்து, தாயாய்ப் பாசமழை பொழிந்து அவர்தம் வேதனையைக் குறைக்க உதவியமை எனப் பட்டியல் விரிக்கலாம். இத்தனைக்கும் மேலாய் இவர்தம் சொந்தப் பாதுகாப்பை கவனத்திற் கொள்ளாமை எமை மெய்சிலிர்க்க வைத்தது. வாகனச்சாரதிகளாக வந்தவர்கள் எறிகணை மழையிலும், வான் தாக்குதலுக்கிடையேயும் தம் வாகனங்களை லாவகமாகச் செலுத்தியமை எமக்கு இன்ப அதிர்ச்சியைக் கொடுத்தது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிலர் தங்கள் உயிரை சமர்த்தேவைக்கு அர்ப்பணித்தமையும் குறிப்பிடத்தக்கது.

10 . 06 . 98 காலை சுதந்திரபுர கிராமம் வழமைபோலவே சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. திடீரென வான்பரப்பை ஆக்கிரமித்த கிபிர் குண்டு வீச்சு விமானங்கள் மக்கள் குடிமனைகளை துவம்சம் செய்கின்றன. ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஆட்லறிகளும் துணையாகச் சேர்ந்து கொள்கின்றன. விழைவு பல பொதுமக்கள் உடல்கள் சின்னாபின்னமாகச் சிதம்பிக் கிடக்கின்றன. இன்னும் பலர் படுகாயமடைந்து ஈனக்குரல் எழுப்புகின்றனர். தாக்குதல் சிறிது ஓய்ந்தவுடன் மீட்புப்பணியில் பொதுமக்களும், போராளிகளும் ஈடுபடுகையில் மீண்டும் அக்கிராமம் வான், எறிகணைத் தாக்குதல்களினுள் சிக்கிக் கொள்கின்றது. வானையும், மண்ணையும் புகைமண்டலம் இணைத்திருக்க அதனூடு மீட்கப்பட்டவர்கள் புதுக்குடியிருப்பு பொது மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர். பெருமளவில் மக்கள் காயமடைந்திருந்தனர். எல்லோருக்கும் சிகிச்சையளிக்க போதிய வசதி அம்மருத்துவமனையில் இருக்கவில்லை. அதனால் அவர்களில் பலர் விடுதலைப்புலிகளின் சத்திரசிகிச்சைக் கூடங்களுக்கும் கொண்டு செல்லப்படுகின்றனர். அவசர அவசரமாக உயிர் காத்தலுக்கான சிகிச்சையளிக்கப்படுகின்றது.

இவ்வாறு எதிரி பெருமெடுப்பில் எம்மக்கள் மீது திடீரெனத் தாக்குதல் தொடுக்கும் போது பெரும் எண்ணிக்கையில் மக்கள காயமடைவர். மேலும் விரைவான உறுதியான வெற்றிகள் வேண்டி இராணுவ விஞ்ஞானத்தினுள் இதுவரை இணையாத பலமுறைகளில் எதிரிமீது தாக்குதல் தொடுக்கும் போது ஒருசில மணிகளினுள் பலநூறு போராளிகள் பலவகைக் காயங்களிற்குள்ளாவர். இதன் பொழுது இவர்களிற்கும் உயிர்காத்தலுக்கு முன்னுரிமை கொடுத்து சிகிச்சையழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. எங்களின் மருத்துவ மற்றும் ஏனைய வளங்களும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் ஒவ்வொருவருக்கும் நீண்டகால நோக்கில் பூரண திருப்தி தரக்கூடிய வகையில் சிகிச்சை செய்யமுடிவதில்லை. இதனால் பொருந்தும் என்புகளில் ஒழுங்கின்மை, அறுந்த நரம்புகள் சீரிய முறையில் பொருத்தப்படாமை, முகம் போன்ற பகுதிகளில் அவலட்சணம் தரும் தோற்றங்கள் காணப்படுதல் போன்ற பாதிப்புகள் பலரில் தொடர்கின்றன. இவ்வாறான பாதிப்புக்களின் தாக்கத்தைக் குறைப்பதற்கு துறைசார் நிபுணத்துவ உதவி தேவைப்படுகின்றது. மேற்படி செய்தியை போர்ச்சிலுவை சுமக்கும் மக்கள் சார்பில் உலகெங்கும் பரந்து வாழும் எம்மினிய உறவுகளின் கவனத்திற்கு கொண்டுவர இவ்வேடு முனைகின்றது.

O



www.eelamview.com

www.eelamview.com



# இந்த மண்ணும் அந்த இனியநாட்களும்

கீழுவான் திசையைக் குருதிச் சேறாக்கி
வானத்தில் பிரசவம் நடக்கும்.
முகம்மலர்த்திப் பிள்ளைச் சூரியன் பிறப்பான்.
பனிநீராடிய மரங்கள் குங்குமப் பொலிவோடு சிரிக்க
இருள் விலகும்.
காணும் பொருளனைத்துக்கும்
யார்தான் காற்கொலுசு பூட்டுவரோ?
எல்லாமே செல்லமாகச் சிணுங்கியபடி சிலிர்க்கும்.
மெல்லியகுளிரும் பூவாசமுமாக முற்றமிருக்கும்.
கூடுவிட்டு விடுதலைப் பண்பாடி
விரித்தசிறகெடுத்துக் குருவிகள் வந்திறங்கும்.
வேலிவிட்டிறங்கும் கோழிகள்.
வெறுந்தரையானாலும்
விளைந்த வயலானாலும்
அவையழகு ஆயிரம் கோடிக்குத் தகும்.
ஏதோ உலகஇயக்கமே தன்னசைவிற்தான் என்பது போல்
கோயில் மணிகளின் நாதம் காற்றிலிழையும்.
கோபுரப்பறவைகள் சிறகடித்துப் பறந்து
திரும்பவும் வந்து குந்தும்.
பூமி சூதுப்பெறும் பொழுதிதுதான்.
கட்டவிழ்த்த கறவைமாடுகள் மேச்சலுக்குப் போகும்.
ஏர்நிமிர்த்தி வயலேகும் நாம்பன்கள்.
புத்தகச் சுமையோடு பள்ளிக்குச் செல்லும்
வண்ணத்துப் பூச்சிகளால் தெருக்கள் வடிவுபெறும்.
கலகலத்தோடும் அந்தச் சிறுநதிகளின்
பிஞ்சுப்பாதங்கள் தொடும் வீதிகள்
புண்ணியம் செய்தன.
நகர்நோக்கிப் போகும் பேருந்துகள்
ஊரில் ஏகாந்த அமைதிகுலைத்து ஏகும்.
வண்டில்கள்— தாளச்சுருதிக்குச் சரியாகச் சுடக்கடித்து
இடுகேற்றி வரும்.
இப்படித்தான் — எத்தனை அழகோடு
இந்தமண்ணின் அந்தநாட்கள் இருந்தன.
நெஞ்சில் சுமையற்ற நிறைவுடன்
மண்ணுடன் இணைந்த வாழ்விலொரு மகிழ்விருந்தது.
தெருவிளக்குகளற்ற இருள்கவிந்த வீதிகளெனினும்
பயமற்றிருந்த பரவசம் எமக்கு.
அச்சமில்லாத வாழ்வின் அழகில்
எம் ஜீவிதத்துக்கு ஒரு அர்த்தமிருந்தது.
மரங்களுடன்கூட இழைபிரியா உறவிருந்தது.
வேலையும் உழைப்புமாகப் பகலும்
ஆடலும் பாடலுமாக இரவும்
வருவதும் போவதும் அறியாமல் கழிந்ததெம் காலம்.
வெளியுலகம் விஞ்ஞானத்தைச் சுற்றிச் சுழன்றது.
எங்கள் வாழ்வுமட்டும் அதே அழகுடன்
அதே எளிமையுடன்
அதே பேரமைதிப் பொலிவுடன்
முகத்தில் இதழ்பிரியாச் சிரிப்புடன் இருந்தது.
உலகெங்கும் ஊர்கள் இப்படித்தான் இருந்ததெனினும்
அழகிருந்தது எங்கள் பூமியிற்தான்.
எங்கள் முகத்திலும் வடுக்கள் இருந்தன
கைகளிற் கறைகள் இருந்தன
எங்கள் பக்கங்களிலும் இருண்டபக்கங்களிருந்தன.
எல்லாமே இருந்தன தான்.
ஆயினும் எம்மூர்களின் அழகிருக்கிறதே
அது வார்த்தைகளால் வடிவமைக்க முடியாத
பேரெழிற் சிற்பம்.
கவிதைகளால் கட்டமைக்கமுடியாத கட்டுமானம்.
ஒருநாளெனினும் இங்கு வாழ்ந்தவர்களுக்கே
இதை உருவகமாக்கி உணர்த்தமுடியும்.
வையப் பரப்பெங்கும் அகதிகளாக அலையும்
தேசபுத்திரர்களின் நரம்புகளைச் சுரண்டிப் பாருங்கள்
அந்த உணர்வுக் கொப்பளிப்பில்
ஊரின் அழகே தெரியும்.
கால நிர்ப்பந்தத்தினால் அலையெற்றிய சருகாய்
எங்கெங்கோ கரையொதுங்கிய இதயங்களைக் கேளுங்கள்
விழிக்கசிவுடன் வெளியே வழிவது
ஊரின் உந்நதங்களே.
நீரடித்துப் பிரியாத நீராய்
தாயடித்து நோவாத சேயாய்
மறக்கமுடியுமா அந்த மகோன்னதமான நாட்கள்?
இத்தனை அழகையும் தான்
அடித்து வாயிற்போட வந்தனர் அவர்கள்
எல்லாவற்றையும் இல்லாதனவாக்கினர்.
சின்னக் கூடுகட்டி வாழ்ந்த ஜீவிதத்துக்கும்
வண்ணம் கலையாதிருந்த எங்கள் வாழ்வுக்கும்
என்னதான் நடந்தது?
ஒரு விளக்கியெடுத்த குத்துவிளக்குப் போல
கன்னம் குழிவிழச் சிரிக்கும் சின்னக் குழந்தையைப் போல
நிர்மலமாகக்கிடக்கும் நீலவான விதானத்தைப் போல
இருந்த வாழ்வைத்தானே இல்லாமற்செய்தனர்.
வேர்கருகிக்கிடக்கிறது விருட்சம்.
துக்கித்துக் கிடக்கிறதெம் சோபிதம்.
ஏர்கீறிய எங்களின் தாய்மடியை
இன்று யந்திரயாலனைகள் உழக்குகின்றன.
பழங்கள் மட்டும் விழுந்த பூமியின் மேனியில்
இன்று குண்டுகள் விழுந்து குழியாக்குகின்றன.
எந்த நேரமும் எதுவும் நடக்கலாம்
செவ்வந்திப்பூவாய் சிரிப்புப் பூப்பூத்திருந்த தேசம்
கம்பிகளுக்குள்ளே இப்போ கண்ணீர்வடிக்கிறது.
கள்ளிச்செடிகளின் கையிடுக்குகளுக்கிடையே தான்
முல்லைப்பூக்களிப்போ மூச்சுவிடுகின்றன.
குயிலிருந்து பாடிய கொம்புகளிலிருந்து
ஆந்தைகள் அலறுகின்றன.
சாக்காடாய் போனது சந்தனப்பூமி.
நாமெல்லாம் தனித்தனித் தீவுகளாகி
நிர்ப்பந்த நீர் சூழ்ந்துள்ளோம்.
எட்டாத் தொலைவில் எல்லா உறவுகளுமென்றாச்சு.



தும்மினாலே ஓடிவந்துபார்க்கும் சொந்தங்கள்
செத்தாலே வரமுடியாத் தொலைவென்றாச்சு.
எப்படிச் சிரிக்கும் எங்கள் முகங்கள்.
ஒப்பாரியும் எம்தேசமுமே இப்போது உறவாச்சு.
பனிவிழும் தேசங்களிலும்
பாலைவனச் சுடுபுழுதியிலும்
பூமிப்பந்தின் எல்லாப் புள்ளிகளிலும்
வகை தொகையின்றி வாழும் எம் சொந்தங்களே
இனிக் கவலைகளைக் காச்சிப் பாகுசெய்து
மதுரச் சுவையாக்கி மகிழ்வோம்.
என்றினிக் காண்போமென்ற ஏக்கத்தைத் தொலைத்து

## உலைக்களம்

**- வியாசன்**

ஊர்திரும்ப நீங்களும் நாங்களும் உழைப்போம்.
வாழுமெம் தொப்பிள்கொடி உறவுகளே
தாய்நிலத்தை மீளமைக்கும் பணிக்கு
நாமிருக்கிறோம் என்ற உங்களின் குரல்கள்
வந்தெம் காதுரசும்போது எத்தனை மகிழ்ச்சியாக இருக்கிறது.
சிறைப்பட்டிருக்கும் சிட்டுக்குருவிகளாய்
நாங்களிங்கு சிக்குண்டுள்ளோம்.
எனினும் விரைவில் விலங்குடைத்து
மீண்டும் சிறகுவிரிப்போம்.
கூண்டுடைத்து வெளியே குதிப்போம்.
வசந்தம் வரும்
குயிலின் குக்கூச் சத்தம் அடிவளவு மாமரத்தில் எழும்.
முகம்திருத்திய முற்றத்துப் பூமரத்தில் பூக்கள்
குங்குமம் பூசிக் குதுகலிக்கும்.
நீங்கள்; வருவீர்கள்
நீங்கள்; வந்திறங்கும் வாசலில் நாங்கள் வழிபார்த்திருப்போம்.
மீண்டும் இங்கே வசந்தத்தின் பூவாசம் வந்து
எம் மேனிதழுவும்.
பாட்டும் கூத்துமாக எம் பகலிரவு கழியும்.



www.eelamview.com